# இறைதூதன்
## Messenger of God

UNIVERSITY OF JAFFNA
09 DEC 1999
DIVISION

### இம்மாதச் செய்தி

குரு என்பதன் உண்மையான பொருளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குரு என்பவர் போதிப்பவர் அல்ல, மந்திர உபதேசம் செய்பவரல்ல, குரு என்பவர் அக் ஞானத்தை விலக்குபவர். கு - என்பது குணாதீதன். குணத்தைக் கடந்த நிலை, ரு - என்பது உருவத்தைக்கடந்த நிலை. குணங்களையும் உருவங்களையும் கடந்தவர் கடவுள் ஒருவரே. எனவே உண்மையான குரு கடவுள் ஒருவரே. மற்ற அனைவரும் ஆசிரியர்களே.

செய்திக் கட்டுரை
(3ம் பக்கம்)

சர்வமதப் பத்திரிகை
ஆடி 1999
முரசு 16

மாதம் ஒரு முரசு
விலை ரூபா 10/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரபஞ்ச குரு சாயி

**சாய் ராம்!**

அஞ்ஞான இருள் போக்கி மெய்ஞான ஒளியைத் தருபவர் தான் குரு அதாவது நாம் எங்கிருந்து வந்தோமோ திரும்பவும் அந்த இடத்திற்கு போவதற்குரிய வழிவகைகளைக் காட்டுபவர் தான் குரு.

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? எதற்காக இங்கு வந்தேன்? இப்போது நான் என்ன செய்து கொண்டு இருக்கிறேன்? நான செய்வதெல்லாம் சரியா? பிழையென்றால் சரியான பாதை எது? நான் எதைச் செய்தாலும் இன்பம் போல தோற்றம் காட்டி பின் துன்பமாக முடிகிறதே ஏன்?

இப்படிப்பட்ட கேள்விகள் மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு மனிதனுக்கும் எழும். அந்த வேளைகளில் தான் அவன் குருவைத் தேடி அலைகிறான்

கோவில்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், சாயி நிலையங்கள் என்று தேடி ஓடி அலைகிறான் எங்களுடைய தாகம் உண்மையானதாக இருந்தால் இறைவனே குருவாக வந்து நம் இருள் களைந்து ஒளி கொடுப்பார் எப்படி!

''நீ கடவுளிடம் இருந்து வந்தவன் கடவுள் பெரிய ஜோதி நீ அதன் சின்னஞ் சிறு பொறி எனவே நீயும் கடவுளும் ஒன்று தான் அதாவது கடவுள் தந்தை நீ பிள்ளை தந்தையாகிய கடவுளை விட்டு நீ இங்கு வந்ததற்கு காரணம் ஆசை அவ்வுலக வாழ்விற்கு ஆசை பொருந்தாது எனவே அந்த ஆசைகளைத் தீர்த்து திரும்பவும் என்னிடம் வந்து விடு.''

எனப்பூமிக்கு அனுப்புகிறார் கடவுள் இதற்கு சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு சான்று ஆனால் பூமிக்கு வந்த நாம் என்ன செய்கிறோம்? ஒரு ஆசைக்குப் பதில் ஒன்று முடிய மற்றதாக ஒன்பது ஆசைகளை வளர்த்து ஆசை என்ற வலைக்குள் அகப்பட்டு அதில் இருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறோம்.

''நீ பூமிக்கு வந்தது ஆசை வலைகளைப் பின்னி அதற்குள் அகப்பட்டு அழிவதற்கு அல்ல நீ கடவுளின் சொரூபம், கடவுளுக்குரிய குணங்களெல்லாம் உன்னிடம் உள்ளது ஆசையின் காரணமாக கடவுளைப் பிரிந்து வந்து விட்டாய் விழித்தெழு!''

என மனதிற்குள் அடங்கிக் கிடக்கும் தெய்வீகத் தன்மையை தட்டி எழுப்பி தெய்வீகப் பாதை நோக்கிச் செல்லும் அற்புதத்தைச் செய்பவர் தான் குரு

இன்றைய கால கட்டத்தில் ஆத்மீக தாகம் கொண்டவர்களின் குருவாக கடவுளாக, ஸ்ரீ சத்ய சாயிபாபா விளங்குகிறார். 'அவன் அருளால் அவன் தாள் வணங்கி', என்பதற்கமைய நாம் பிறந்த பயனை அடைய அவரை குருவாகக் கொண்டு அவரின் போதனைகளை கடைப்பிடித்து வாழவும் அருள் வேண்டும். அவர் இந்தப் பிரபஞ்சத்திற்கே குருவாக விளங்குகிறார் என்பதை பிரசாந்தி நிலையத்தில் பல இன, மத மக்கள் கூடுவதிலிருந்து தெளிவாகும்.

**– ஜெய் சாய்ராம் –**

# ஆசைக்கு வரம்பு

1998ம் ஆண்டு நவம்பர் மாதம் புட்டபர்த்தியில் நடைபெற்ற மகாநாட்டில் ''நீ செய்கிற சேவை தான் நான் தரும் ஆசீர்வாதம்'' என்று சுவாமி கூறியிருக்கிறார். இதை நாம் திருப்பிப் பார்த்தால் சேவை செய்யாவிடின் நான் தேவையில்லை. அதாவது எனது ஆசீர்வாதம் இல்லை எனக்கருதலாம். இதில் இருந்து சேவையின் மகத்துவத்தை நாம் அறியலாம். உணவு, சக்தி, நேரம், பணம் இவற்றிற்கு வரம்பிடுதலால் ஆசைக்கு வரம்பிட முடியும்.

உலகத்தின் சகல பிரச்சினைகளுக்கும் காரணம் ஆசைக்கு வரம்பு இல்லாமையே ஆகும். தனி மனிதனில் இருந்து குடும்ப மட்டத்திற்கும் பின் கிராமம் நாடு என்று உலகளவில் இந்த ஆசைக்கு வரம்பின்மையால் தான் பிரச்சனை உண்டாகி உள்ளது.

கண்ணபரமாத்மா பாரதப்போரை எப்படி நிறுத்தலாம் என்று பாண்டவர்களிடமும் கௌவரவர்களிடமும் தனித்தனியே கேட்டார். ஒருவரும் போரை நிறுத்த சம்மதம் தெரிவிக்கவில்லை அதாவது கண்ணனுடைய நோக்கமே போரை நடத்துவது தான் இதைப்போல் தான் சுவாமியும் தான் வந்த நோக்கத்தை நடத்தியே தீருவார்.

> *வடபிராந்திய ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சேவாதள தொண்டர் பயிற்சி முகாமில் ஸ்ரீ. என். கந்தசாமி அவர்கள் ''ஆசைக்கு வரமபு'' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுமாகிறது.*
>
> தொகுப்பு: செல்வி. இந்திரா இராஜரட்ணம்

## ஆசையால் ஏற்படும் பிரச்சனை என்ன?

1) ஏமாற்றம்: உதாரணமாக ஒரு சுவீப்ரிக்கற்றை வாங்குகிறோம் பின் இலக்கத்தை சரி பார்த்த போது இறுதி இலக்கம் மட்டும் வேறாகி இருந்தால் அடுத்த முறை ஐந்து ரிக்கற்றை வாங்க முயல்கிறோ.ம் அப்பவும் முதல் எழுத்து மட்டும் மாறுபட்டிருந்தால் அடுத்த முறை பத்து ரிக்கற்றுக்கள் வாங்கிப் பார்த்தால் என்ன என்று எண்ணத் தோன்றும்; இதனால் பணம், சக்தி, சிந்தனை என்பன வீணாகும்,

2) கனவுலகில் சஞ்சாரம்! அதாவது ஒரு திருமண வைபம் ஒன்று வீட்டில் நடத்துவதாக இருந்தால் சாதாரணமாக தேவையான ஒழுங்குகளை நேரம் வசதி கருதி செய்து விட்டு இருக்கலாம்; ஆனால் ஆசை கூடினால் இப்படிச் செய்வோம். அப்படிச் செய்வோம் என்று பல எதிர் பார்ப்புக்கள். இதனால் பல பல நாட்கள் யோசித்து யோசித்து மூளைக்கு வேலையும் பணச் செலவு போன்ற தேவையற்ற விரயங்களும் ஏற்படும்.

3) பரத்துவத்தை மறந்து விடும்: பரத்துவத்தை அதாவது எங்களுக்குள் இறைவன் இருக்கிறார். என்ற நிலையை மறந்து விடுவோம். காரணம் இறைவனுக்கு ஆசை இராது. ஆசை இருக்கும் என்றால் அவன் மனிதன் அல்ல. ஆசையை முற்றாக இல்லாமல் செய்வது முடியாது. அனால் வரம்பு வைக்கலாம்.

சேவைத் திட்டங்களை கிராமிய சமுதாய ரீதியில் செய்வதால் பலரும் நன்மை பெற முடியும் இதற்கு பணம் நேரம் என்பன முக்கியமானது. அவசியமற்ற விடயங்களுக்கெல்லாம் பணம் செலவு செய்கிறோம். இதை மீதப்படுத்தினால் பல நல்ல சேவைத் திட்டங்களிற்குப் பயன் படுத்தலாம்.

### உணவு

உணவு - கடவுள் உயிர் – கடவுள்.

உணவும் உயிரும் சேர்ந்து தான் மனிதன். மனிதன் தன் ஆத்மீகத்தை விழிப்புறச் செய்ய சாத்வீகமான உணவை அளவோடு உண்ண வேண்டும். உணவைப் பொறுத்துத் தான் மனம் அமையும் எமது ஆத்மீகத்தை விழிப்புறச் செய்யத் தான் பகவான் அவதாரம் எடுத்திருக்கிறார். நாம் உண்ணும் உணவின் பெரும் பகுதி கழிவாகவும் ஒரு சிறு பகுதி இரத்தமாகவும் இன்னும் சிறு பகுதி மனமாகவும் மாறுகிறது சாத்வீகமான உணவு உண்பவன், அதாவது வாயால் உள் எடுப்பது, காதால் கேட்பது, கண்ணால் பார்ப்பது யாவும் சாத்வீகமாக இருந்தால் மனம் ஆத்மீகத்தில் ஈடுபடும் அல்லது மிருகத் தன்மைக்கு மாறி விடும்.

### பணம்

மிகக் கவனமாக உபயோகிக்க வேண்டும். வீண் செலவு செய்தால் லட்சுமி கடாட்சம் இல்லாமல் போய்விடும் வீண் விரயம் செய்வதால் பல பிரச்சனைகள் தோன்றும் அடுத்தது சந்ததிக்கும் நாசத்தை உண்டாக்கும்

### நேரம்

நேரம் இல்லாமல் போவதற்குக் காரணம் அதைச் சரியாகச் செலவு செய்யாமையேயாகும் சிருஷ்டியில் உள்ள அனைத்தும் நேரத்தில் தான் தங்கி உள்ளன பிறக்கும் போதும் நேரம் குறிக்கப்படும். பிறப்பில் இருந்து இறப்பு வரை சகல காரியங்களும் நேரத்தில் தங்கி உள்ளன.

11ம் பாக்கம் பார்க்க

சித்த சுத்தியினால் ஞான சித்தி பெறலாம். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான குரு கடவுளே மற்ற அனைவரும் ஆசிரியர்களே

**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா**

## யார் குரு?

இவ்வுலகில் உள்ள வரையில், மனதைக் கொண்டு செயல்கள் புரிந்தே ஆக வேண்டும் குரு உனக்கு வெளியே உலகில் இருந்து போதிப்பதால் உண்மையிருப்பை அறிந்து கொள்ள இயலவில்லை. அவர்கள் போதனைகள் மனிதத் தன்மையுள்ள தெய்வத் தன்மையை இன்னும் உள்ளடங்கச் செய்து விட்டன.

குரு என்பதன் உண்மையான பொருளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குரு என்பவர் போதிப்பவர் அல்ல; மந்திர உபதேசம் செய்பவரல்ல குரு அக் ஞானத்தை விலக்குபவர் 'கு' குணாதீதம். குணத்தைக் கடந்த நிலை. ரு என்பது குணங்களைக் கடந்து உருவங்களையும் கடந்தவர் கடவுள் ஒருவரே உண்மையான குரு கடவுளே. மற்ற அனைவரும் ஆசிரியர்கள்

கல்லூரிக்குச் சென்றதும் மாணவன் கணக்கு ஆசிரியர் பௌதிக இயல் ஆசிரியர், இரசாயன இயல் ஆசிரியர் ஆகிய பலரைச் சந்திக்கின்றான் அனைவரையும் குரு என்ற நிலையில் எவ்வாறு கௌரவிக்க இயலும். அனைவரும் ஆசிரியர்கள் குரு என்பவர் யார்? இலட்சியத்தைக் காண்பிப்பவர் குரு. இலட்சியம் இலக்கு ஆத்மதத்துவமே. குறிக்கோள் இல்லாது குரு எவ்வாறு இருக்க இயலும்?

பக்தியுடன் புனிதமாக இருப்பவரே குரு தன்னையறிந்தவ்ரே உண்மையான குரு.

## சுக்ராசாரியாரின் தவறு

பண்டைய காலத்தில் கிருதாயுக்த்தில் இறைவன் நாராயணன். வாமனனாக அவதரித்தார். பலிச்சக்கரவர்த்தியை திருத்துவதற்காக அவரது யாக சாலைக்குச் சென்றார். பலியின் குரு சுக்ராசார்யர். ஆசார்யர் என்பவர் கற்ற தன் வழியில் வாழ்க்கை நடத்துபவர். இத்தகைய குரு உடனிருக்க வந்தவர் இறைவன் நாராயணன் என்று உணர்ந்து பலி அவர் கேட்ட தானம் அளிக்க முன் வந்தான். அவ்வாறு வாக்கும் அளித்தான்.

சுக்ராசாரியார் கூடாது வேண்டாம், நீ வஞ்சிக்கப்படுவாய் உனது அரசு பறிக்கப்படும் நீ தானம் அளிக்க முன் வராதே என்று தடுத்தார்

பலி கூறினான். இறைவனை விட உயர்ந்தவர் யார்? கொடுத்த வாக்கு மீறுதலை விட பாவம் வேறு உண்டோ? பொய் கூறுதலுக்குச் சமமான இது மிகப் பெரும் பாவம். குரு சபித்தாலும் பரவாயில்லை. நான் தானம் செய்வது உறுதி.

இத்தகையவர் குருவா? இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதைத் தடுப்பவர் குரு ஆவாரா

## துரோணரின் குரு தட்சிணை

துவாபர யுகத்தில் பாண்டவர்களுக்கு அனைத்து ஆயுதப் பயிற்சிகளையும் துரோணாச்சார்யர் குருவாக இருந்து கற்றுக் கொடுத்தார். துரோணாச்சார்யர் அர்ச்சுனனுக்கு வாக்குறுதியளித்தார். நான் வேறு யாருக்கும் குருவாக இருக்கப் போவதில்லை. நான் கற்றதனைத்தையுமே உனக்குக் கற்பிப்பேன் என்று உறுதி கூறினார்.

அவரது வாக்குறுதி காரணமாக, அர்ச்சுனன் கர்வங் கொண்டான் துரோணர் வித்தைகள் எல்லாவற்றையும் அர்ச்சுனனுக்குக் கற்பித்தார். வேறு யாருக்கும் கற்பிக்கவில்லை.

ஒரு முறை ஏகலைவன் வில்வித்தை கற்பிக்க வேண்டுமென்று துரோணரை வேண்டினான் நான் அருச்சுனனுக்கு வாக்குறுதியளித்து விட்டேன் வேறு யாருக்கும் நான் குருவாக இருக்க இயலாது என்றார்.

ஒரு சமயம் பாண்டவர்களும் கௌரவர்களும் காட்டில் இருந்தார்கள். அவர்கள் நாய்களைத் தம்முடன் கூட்டிச் சென்றார்கள். அங்கு ஒரு மிருகத்தைக் கண்டு நாய் குலைத்தது. திடீரென்று நான்கு, ஐந்து அம்புகள் வந்தன. அனைத்தும் ஒரே இடத்தை நோக்கி வந்தன.

> *மாணவர்களை வளர்த்தெடுத்தல், உயர்த்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களாகிய நீங்கள் இந்தச் செயலின் மேன்மையையும் செயலில் அதனை வெளிப்படுத்த வேண்டிய தேவையையும் அறிந்திருத்தல் வேண்டும்.*
>
> — பாபா -

அர்ச்சுனனுக்கு அதிசயம் மிகுந்தது. இவ்வாறு சத்தத்தைக்கேட்டு ஒரே இடத்தை நோக்கி இவ்வாது அம்பு எய்திய சிறந்த வில்லாளியார் என்று ஆர்ச்சுனன் அதிசயம் அடைந்தான், 'என்னால்கூட இவ்வாறு அம்பு செலுத்த இயலாதே' என்று நினைத்தான்.

பிறர் அதிக வல்லமை பெற்றிருந்தால் பொறாமைப்படுவது இயல்பு. அவனைத் தேடிச் சென்ற போது, ஒரு குடிசைக்கருகில் வில்லையும் அம்பையும் கொண்டு ஒரு வேடன் நிற்பதைக் கண்டார்கள் உற்று நோக்கினர்.

''நீ தானே அம்பு எய்தவன்'' என்று வினவினர் ஆம் என்று பதில் வந்தது அவன் காட்டு சாதியைச் சேர்ந்தவன்.

'உனது குரு யார்' என்று கேட்டனர். முன்னால் துரோணரை வேண்ட அவர் மறுத்ததும் அவரை குருவாக பாவித்து தியானம் செய்து வித்தைகளைக் கற்றுக் கொண்டதால் அவரையே தனது குரு என்றான்.

அருச்சுனனுக்கு சினம் மிகுந்தது தனக்கு வாக்குறுதி அளித்து விட்டு துரோணாச்சாரியார் ஏகலைவனுக்கு குருவாக மாறி விட்டார் என்று மனம் கவின்றான் துரோணரை பல கேள்விகள் கேட்டான்.

துரோணர் நான் வேறு யாருக்கும் குருவாக இல்லை எறு உண்மையைக் கூறினார். அவன் என்னை வேண்டிக் கொண்டான் ஆனால நான் பதில் கூறவில்லை என்றார். அர்ச்சுனன் சினம் தணியவில்லை.

இங்கு என்னை விடச்சிறந்தவன் இருப்பதைக் காண்கிறேன். அத்தகையவன் செயலற்று இருக்க வேண்டுமென்று விரும்பினான் தன்னை விட உயர்ந்தவன் வேறு யாரும் இல்லாதவாறு துரோணர் நிச்சயிக்க வேண்டுமென்று அருச்சுனன் விரும்பினான் இது பொறாமையால் ஏற்பட்டது

துரோணர் இத்தகைய சூழ்நிலையில் அருச்சுனனின் விருப்பத்திற்கு மாறாக செயல்ப்பட அவர் துணியவில்லை சுயநலம் காரணமாக ஏகலைவனிடம் சென்று ஏகலைவா! உனக்கு யார குரு என்று கேட்டார்.

நீங்கள் தான் என் குரு என்று மரியாதையுடன் கூறினார். துரோணர் நேர்முகமாக கற்பிக்கா விடினும் அவரைக குருவாக விரித்து தியானம் செய்யக் கற்றுக் கொண்டவன்'

'குரு தட்சனையாக என்ன கொடுப்பாய்? என்று கேட்டார். ''நான் என்ன கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்'' என்று ஏகலைவன் கூறினான் இத்தகைய நம்பிக்கை மிகுந்த சீடனுக்கு குரு துரோகம் செய்தார்.

கட்டை விரலே குரு தட்சிணை என்றார். அவன் அம்பு செலுத்தும் வல்லமையை இழந்தான், வில்வித்தையின் திறமை இதனால் அழிந்தது. அர்ச்சுனன் விருப்பம் நிறைவேறியது. அர்ச்சுனனை திருப்தி செய்விக்க ஏகலைவன் கட்டை விரலைக் கேட்டு வாங்கினார் துரோணர். இது குருவுக்கு தகுந்த செயலா?

உலகியல் குருமார்கள் சுயநலம் காரணமாக ஆத்ம ஞானத்திலிருந்து விலக்கி ஆழுத்துச் செல்கிறார்கள், அவர்கள் உலகியல் ஆசிரியர்கள் குருமார்களல்லர்.

## சரணாகதி கடவுளுக்கு மட்டுமே

நீ யாரிடமிருந்தும் கற்றுக் கொள்ளலாம் தவறில்லை. ஆனால் கடவுளிடம் மட்டும் தான் சரணாகதி அடைதல் வேண்டும், அதுவே உண்மையான பக்தி!. உண்மையான ஆன்மீகம்! ஆன்மீகத்தைப்! பொறுத்த வரையில், குருவின் பங்கு என்ன? வியாசர் உலகினருக்கு பலவற்றை உணர்த்தினார்

வியாச; நாராயணோஹரி; வியாசர் கடவுள் எனக் கூறப்படுகிறார். இன்று வியாச பௌர்ணமி வேதத்தின் அளவற்ற ஞானம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உலகிற்கு உபதேசிக்கப் பட்டது.

வேதம் நான்காகப் பிரிக்கப்பட்ட முயற்சியின் பயனாக வியாசரின் மனம் புனிதமாகி இதயம் விசாலமாகி விரிவடைந்தது. வேத இலக்கியத்தை உலகத்துடன் பகிர்ந்து கொண்டது. அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. இத்தகைய நிறைவைக் கொடுத்த நாளுக்குப் பெயர் பூர்ணிமா பூர்ணிமா என்றால் பௌர்ணமி என்று பொருள்.

நாம் என்று நமது இதயத்தை தூயதாக்குகிறோமோ அன்றே குரு பூர்ணிமா. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மேம்பாட்டுக் கல்வியின் முக்கியத்துவம்

மனித மேம்பாட்டுக் கல்வியைப் பற்றி வாழ்க்கை முழுவதுமே பேசலாம். ஏனெனில் சுவாமி அவதரித்த நோக்கமே இந்தக் கல்வியில் அடங்கியிருப்பதை நிறைவேற்றுவ்தற்காக அவர் மூன்று அவதாரம் எடுக்கிறார். அவையாவன செய்து முடித்தது. செய்து கொண்டிருப்பது, இனிமேல் செய்யப்போவது.

மனிதனின் மனிதத் தன்மையை மிளிரச் செய்து அவன் தெய்வம் என்பதை உணர்த்தவும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் உருவாக்கப் பட்ட கல்வி தான் இதுவாகும். இது பாலவிகாஸ் ஆகவும் இருக்கலாம். மனித மேம்பாடாகவும் இருக்கலாம்.

இதன் நோக்கம் இந்த நாட்டை தர்ம பூமி யாக்க வேண்டும். என்பதே அதற்கு முக்கிய காரணமாக இருப்பது இந்தக் கல்வி தொடங்கிய காலம் தொடக்கம் இம் மூன்று அவதாரமும் பேச வேண்டியது இது தான். ஒரு சாயி அடியவர் நிலையத்திற்கு வருகிறார் தான் அங்கத்தவர் என்றதால் முதலில் கையொப்பமிடும் இடத் திற்கு செல்கிறார். பின் நிலையத்தை சுற்றி ஒரு பார்வை. அவருடைய பார்வையில் அவர் கல் வியைப் பற்றி இரு இடங்களில் பார்க்கக் கூடிய தாய் இருக்கிறது.

முதலாவது – ஒன்பது ஒழுக்கக் கோட்பாடு கள். அதில் மூன்றாவதாக பாலவிகாஸ் கல்வி யில் குழந்தைகளை படிக்க வைத்தல் என்பது

இரண்டாவது, பிரிவை வந்து பார்க்கிறார் அங்கு மூன்று பிரிவுள்ளது. அவை, கல்வி சேவை ஆன்மீகம். இங்கு கல்வியின் கீழ் இளைஞர் பிரிவு ஒரு பகுதியாக அமைகிறது. இது தான அவரின் கண்ணோட்டத்தில் வருகிறது இங்கு கவில்யின் முக்கியத்துவம் அவருக்கு புலப்படுகிறது. இங்கு முதலாவது சொல்லப்பட்டது ஒன்பது கோட் பாட்டில் மூன்றாவது பாலவிகாஸ் பற்றியது,

பாலவிகாஸ் மாணவர்களுக்கு சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை இவை அமைதியிருக்கை, கதை சொல்லல், பிரார்த் தனை, குழுப்பாடல், குழு முயற்சி மூலம் கற்பிக் கப்படுகிறது. இதனை சாதனையில் நடாத்த வழிகள் காணப்பட்டுவருகின்றன இந்த இரண்டுக் கும் ஒரு பொது வித்தியாசம் என்னவெனில் சத்ய சாயி ஆன்மீகக் கல்வியில் பாபாவைப் பற்றி முழுதும் கூறப்படுகிறது. இது சாயி அடியார் களின் குழந்தைகளுக்கு கற்பிக்கப்படுகிறது. ஆனால் மனித மேம்பாட்டுக் கல்வி எல்லா மாண வர்களுக்கும் கற்பிக்கப்படுகிறது. இது ஆரம்ப கட்டத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது

அடுத்தது இதில் எமது பங்களிப்பு எப்படி யாக அமைய வேண்டும். முதலாவது சிறந்த சேவை எது என்று கேட்டால் சேவை தேவைப் படுகிற இடத்தல், அந்த நேரத்தில் குறிப்பிட்ட சேவையை செய்வது தான் சிறந்த சேவை எனக் கருதப்படுகிறது. இதற்கு ஒரு கதை உண்டு தலைப்பு: ''தர்மர் செய்த யாகம்''

தர்மர் மிகச் சிறப்பாக யாகம் செய்து எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ஒரு கீரிப்பிள்ளை யாகம் நடை பெற்ற இடத்தில் உருண்டு பிரண்டது. தர்மர் அதைப் பார்த்து ''ஏன்? இப்படிச்செய்கிறாய்.'' என்று கேட்டார் அதற்கு கீரிப்பிள்ளை கூறி யது. ''என்னுடைய உடம்பில் பாதி, ஒரு அந் தணர் வீட்டு யாகத்தில் பொன்னிறமாகியது. மறு பாதியை பொன்னிறமாக்க ஒவ்வொரு யாகமாக போய் வருகிறேன். ஆனால் இன்னும் நிறைவேறவில்லை எனறது.

அப்போது சகாதேவன் அந்தயாகம் எங்கே நடை பெற்றது என அக்கீரிப்பிள்ளையிடம் கேட்டார். ஒரு ஏழை அந்தணர் மனைவி, மகன், மருமகள் என நால்வர் உள்ள குடும்பம். அவர் களால் தமக்கு கிடைப்பதை எப்போதும் நான் காக பங்கிட்டு சாப்பிடுவது வழக்கம். ஒரு நாள் நான்கு அப்பங்கள் சுட்டார்கள். அப்போது ஓர் ஏழை சாப்பாடு கேட்டு வருகிறார். உடனே மருமகள் தனது பங்கினை கொடுக்கிறாள். அவர் சாப்பிட்டு முடிந்ததும் மீண்டும் நிமிர்ந்து பசியோடு அவர்களைப் பார்த்தார். அடுத்தாக மகன் அடுத்து தாய், இறுதியாக தந்தை தனது பங்கையும் கொடுத்தார். அவர்களுக்கு வீட்டில் ஒரு உணவும் இல்லை.

> ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சேவாதளத் தொண்டர் பயிற்சி முகா மில் ''பாலவிகாஸ் மனித மேம்பாட் டுக்கல்வியின முக்கியததுவம்'' பற்றி ஸ்ரீமதி. ம. சரவணபவான் (கல்வி இணைப்பாளர்) ஆற்றிய உரையின் ஒருபகுதி இங்கு பிரசுரமாகிறது
>
> தொகுப்பு: திருமதி ப. வசந்தசேனன்

ஆனால அந்த ஏழையோ பசி நீங்கிய சந் தோஷததுடன் சென்றார் இந்த சம்பவம் வயிற் றுப் பசிக்கு நடந்த ஒருயாகம அந்த இடத்தில் சிந்தப்பட்ட மாவில் உருண்ட கீரியின் உடலில் பாதி பொன்னிறமாகியது எங்கு தேவைப்படுகி றதோ அங்கு வழங்கப்படுவதே சேவை.

பசி என்று ஒருவர் வந்தால் தன் பசியை பொருட்படுத்தாமல் அவருக்கு வழங்கியதே யாகம் அதை விடுத்து பின்பு வரும்படி கூறுதல் தவறு ஆகவே நாம் தேவையான இடத்தில், தருணத்தில் சேவை செய்ய வேண்டும். இந்த சேவை ஏன் இங்கு கூறப்படுகிறதெனில் இதை நாம் நடைமுறைப் படுத்துவதற்கேயாகும்.

நாம் சத்ய சாயி ஆன்மீகக் கல்விக்கு முக்கி யத்துவம் கொடுக்க வேண்டியதன் காரணம் சுவாமியே இவ்வளவு காலமும் அற்புதம் செய்தே மக்களைக் கவர்ந்தார். அற்புதத்தின் மூலம் தான் அடியவர்கள் ஆனார்கள் சுவாமியாலே எதுவும் செய்ய முடியும். ஆனால் இந்த நிலையிலிருந்து மாறவேண்டும் உருவமுள்ள வழிபாட்டிலிருந்து உருவமற்ற வழிபாட்டிற்கு மாணவர்களை அழைத்துச் செல்வதே பாலவிகாஸின் முக்கியத் துவம்.

இந்நிலைக்கு பிள்ளைகளை கொண்டுவந் தால் தான் பிள்ளை தன்னுள் இறைவன் இருக் கிறார். என்பதை சிந்திக்கும் இது தான் 'ஒளித் தியானம்' என்று சொல்லப்படுகிறத. பத்து வயதில் பிள்ளைக்கு ஒளித்தியானம் சொல்லிக் கொடுக்கப் படுகிறது பாலவிகாஸில் இது செய் யப்படுகிறது வீட்டிலும இது நடைமுறைப்படுத் தப்படுகிறது இதனால் பாலவிகாஸின் முக்கியத் துவம் எவ்வளவு பெரிது என்பது விளங்குகிறது எனவே தான் இந்தக் கல்விக்கு கூடிய முக்கியத் துவம் கொடுக்கும்படி ஒவ்வொருவருக்கும் சொல் லப் படுகிறது.

அதே நேரத்தில் இன்னுமொன்று சொல் லப் படுகின்றது. எல்லோரும் மனிதமேம்பாட்டுக் கல்வி பற்றிய அறிவை பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொருவரும மனித மேம்பாட்டுக்கல்வி பயிற்சி எடுக்க வேண்டும்.

## தீங்கு செய்தவர்க்கும் நன்மை செய்

''இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
வென்ன பயத்ததோ சால்பு''

இக்குறள் சான்றான்மை அதிகாரத்தில் ஏழாவது பாடலாக அமைகின்றது இதன் பொருள் விளக்கம் துன்பம் செய்பவர்களுக்கு அத்துன்பததை பொருட்படுத்தாது நன்மையானவற்றையே செய்ய வேண்டும் அவ்வாறு நன்மையானவற்றையும் செய்யாது விடுகின்றபோது நற்குணங்கள் நிறைந்த சால்புடைமையை நாம் பின்பற்றி வாழ்கிறோம் என்று கூறுவதனால் என்ன பயனை பெற்றுக் கொள்ள முடியும் ஒருபயனையும பெறறுக்கொள்ள முடியாதாகும். என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார் நாம மறறவர்களை மகிழ்விக்க வேண்டுமானால் எண்ணம சொல், செயல், ஆகியவற்றால் தீங்கு செய்தல கூடாது எனறும இவை மூன்றினாலும் நன்மை செய்து நாமும் மகிழ்ந்து பிறரையும மகிழ்ச்சியுற வைத்தல் வேண்டும என்றார்.

பிறர் நமக்கு துன்பம் ஏற்படச்செய்தால் அவரை எதிர்த்து தண்டிக்காது அவருக்குத்தீங்கு ஏதும் விளைவிக்காது நல்ல செயல் செய்யவேண்டும் என்றார் இதற்கு உதாரணமாக மெய்ப்பொருள் நாயனார் அவரை கொலை செய்ய குத்திய போது உடனே நாயனார் இவர் அறியாமையினால் செய்கின்றார். இவருக்கு ஏதும் தீங்கு விளைவிக்காது ஊர் எல்லையில் விட்டு விடவுமென்று கூறினார் இதேபோல இயேசுநாதரும் தன்னைச் சிலுவையில் அறைந்தபோது இவர்கள் தங்கள் அறிவீனத்தினால் செய்கிறார்ாள் இவர்களை ஆண்டவரே மன்னித்து விடும்படி கேட்டுக்கொண் டார்.

ஜெ கலையரசி

கல்வியைத் தொடரும் ஞானத்தைத் தேடுபவனே உண்மையில் மாணவனாவன் - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் பாபா தரும் ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகள்

இப்போது நாம் ஒன்பது கோட்பாடுகள் பற்றிப் பார்ப்போம் இதைக் கேட்டவுடன் உங்கள் உள்ளத்தில் தோன்றுவது இது பற்றி எங்களுக்குத் தெரியும் தானே.

சாயி நிறுவனத்தில் அங்கத்தவர்கள் ஆக நாம் சேர்வதற்கு ஒரு விண்ணப்பப்படிவம் நிரப்ப வேண்டும் இதில் நாங்கள் உறுதி அளிப்பது எப்படியெனில் இந்த ஒன்பது ஒழுக்கக் கோர்வையை நான் கடைப் பிடிப்பதற்கு முயற்சிப்பேன் என்பதாகும்.

அது தவிர இன்னும் பல சந்தர்ப்பங்களில் அனேக பயிற்சி முகாம்களில் இந்த ஒன்பது ஒழுக்கக் கோட்ப்பாடுகள் பற்றி அடிக்கடி பேசப்பட்டு வருகின்றது இதனால் எங்களுக்கு பூரணமான விளக்கம் கிடைக்கப்பட்டிருக்கும்

ஒன்பது கோட்பாடுகளை எமக்கு எமது ஆத்மீக முன்னேற்றத்திற்கான ஒரு செயல் வடிவமாகவே சுவாமி தந்திருக்கிறார்.

உதாரணமாக அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஒரு தத்துவம் அதற்கு இணையாக சுவாமி தந்திருக்கிறார் பெற்றோரை வணங்க வேண்டும என்று.

எமக்கு ஒரு நோய் உண்டு. என்னவென்றால் பிறவிப்பிணி என்பது மீண்டும் மீண்டும் பிறப்பது சிவனுக்கு ஒருபெயர் வைத்தியநாதன் எமது நோயைத் தீர்ப்பதால் அவருக்கு இப்பெயர் வந்தது எமது உடல நோய்க்கு மருத்துவர் மருந்து தருவது போல சுவாமி எமது நோயை மாற்ற ஒன்பது விதமான மருந்து தந்திருகிறார்.

## முதலாவது

தினசரி தியானம் இது காலை மாலை போடவேண்டிய மருந்து இது எமது அலை பாயும் மனதை அமைதிப் படுத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தரப்பட்டது இது மிகவும் அவசியமானது கட்டாயமாக செய்யப்பட வேண்டும்.

## இரண்டாவது

வாரத்தில் ஒரு நாளாவது குடும்ப பஜனை. இது ஒரு மருந்து குடும்பத்தில் ஒற்றுமை நிலவுவதற்காகவே இது தேவைப்படுகின்றது. குடும்பம் ஒரு குழுவாக இயங்க வேண்டும். தந்தை ஒரு கொள்கை. தாய் ஒரு விதம் மகன் ஒரு கொள்கை ஒருவர் கடவுள் இருக்கிறரா? கோயில் தான் இருக்கிறார். என்பார். இப்படியாக வெவ்வேறு சிந்தனை இருக்கும் குடும்பம் ஒன்றாகச் சேர இந்த பிரார்த்தனை உதவுகிறது. பிரார்த்தனை மூலம் தான் இநதக் குடும்பங்கள் ஒரு முகப்படுத்தப்படுகின்றன.

நவக்கிரகங்கள் நாலு பக்கமும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அது போல எம் குடும்பங்கள் இருக்கக் கூடாது. வாரத்தில் ஒரு முறையாவது எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு முகமாக பிரார்த்தனை செய்யும் போது எல்லோருடைய சிந்தனைகளும் ஒன்றாக வாய்ப்புண்டு இதை நாம தினசரி செய்வது மிகவும் சிறப்பானது.

## மூன்றாவது:

பிள்ளைகளை பாலவிகாஸ் வகுப்புக்கு அனுப்புதல் இது பாதுகாப்பு முறை. உதாரணம் வீட்டில் T. B நோயாளி இருந்தால் அவரைத் தனிமைப்படுத்த வேண்டும். தடுப்பூசிகள் போட வேண்டும். அதே போல அடுத்த நூற்றாண்டில் தலைவர்களாக வரப்போகும் பிள்ளைகளை வழிப்படுத்த நல்ல சிந்தனைகளை ஏற்படுத்தவும் மனப்பகுவத்தை ஏற்படுத்த அவர்களுக்கான பாதுகாப்பு முறை.

பெற்றோர்கள் பிள்ளைகளை ரியூசனுக்கா பாலவிகாஸ் வகுப்புக்கா அனுப்புவது சரியா என்று தத்தளிக்கிறார்கள். பெறறோருக்கு நாம் எடுத்துக் கூற வேண்டும். நாம் எவ்வளவு நல்ல உணவு எடுத்தாலும் வாரத்திற்கு ஒரு விட்டமின் மாத்திரை எடுக்கிறோம் ஏனெனில் உடல் ஆரோக்கியத்திற்காக அது போல பிள்ளைகளையும் வாரத்தில் ஒரு முறை இவ்வகுப்புகளுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களை நல்ல பண்புள்ளவர்களாக மாற்ற முடியும்.

> வட பிராந்திய ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின சேவாதள தொண்டர் பயிற்சி முகாமில் ஸ்ரீ. எஸ். ஆர். சரவணபவான் (ஆன்மீக இணைப்பாளர்) ஆற்றிய உரையின ஒரு பகுதி
>
> தொகுப்பு: திருமதி வ. பத்மினி

## நான்காவது

நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்படும் சேவைத் திட்டத்தில் பங்கு பற்றுதல்.

வீடுகளில் நடைபெறும் பஜனை தனி நபரின் விருப்பத்திற்கமைய நடை பெறுவது நிலையத்தில் தான் சுவாமியின் லட்சியங்களுக்கு அமைய பஜனை சேவை செய்யப் படுகின்றன. எனவே நாம் சேவை செய்வது எமக்காக எமது இதயம் விரிவடைய வேண்டுமென்பதற்காக நான் எனது என்ற மனப்பாங்கு விலகவேண்டும். ஒரு ஆத்ம விரிவு ஏற்பட வேண்டும். இதற்கான இலகுவான வழி என்னவெனில் சேவை ஆகும்.

நிலையத் தலைவர்கள் மாதமொரு முறை சேவா தொண்டர்களுக்கு சேவை செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிடின் தலைவர் அவர்களுக்கு சேவை செய்ய வாய்ப்பளிக்காத பாவத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லோரும் பங்கு பறறக் கூடியதாக தலைவர் சேவைத் திட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டும்.

## ஐந்தாவது

நிலையத்தில் நடைபெறும் வாராந்த பஜனையிலும் மாதமொரு முறையாவது கலந்து கொள்ள வேண்டும். இப்பஜனையின மூலம் எங்களுக்குள் ஒற்றுமை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை சகோதரத்துவம அன்பு போன்ற நல்ல குணங்கள் ஏற்படுகின்றது. வாராந்த பஜனையின் மூலம் பக்தர்கள் எல்லோரும ஒரே குடும்பமாக சேர்ந்து சமாதானமாக வாழப் பழகலாம்.

சாயி குடும்பத்தில் சிறு பிரச்சனைகள் வந்தாலும் சமாதானமாக விட்டுக் கொடுத்து நடக்கக் கூடியதாக உள்ளது இதன் மூலம் சமுதாயத்தில் நாம் மற்றவர்களுடன் விட்டுக் கொடுத்து சுமுகமாக பழகக் கூடியதாக உள்ளது வாராந்த பஜனையில் கலந்து கொள்வதன் மூலம் நாம் இப்படியான தன்மைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## ஆறாவது

தினமும் சாயி இலக்கியங்களை ஆழ்ந்து படித்தல் இது ஒரு பத்தியம். ஒரு நாளைக்கு ஒரு பக்கமாவது வாசிக்க வேண்டும. இதை ஒரு வைராக்கியமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் எமது நாளாந்த வாழ்வை நல்ல விதமாக அமைத்துக் கொள்ளலாம் இது எமது ஆத்மீக முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்

## ஏழாவது

இதுவும் ஒரு பத்தியம். பிறருடன், மிருதுவாகவும் அன்பாகவும் பேச வேண்டும். இதை மிகவும் அவதானமாக கையாள வேண்டும்.

முன்பு மிருதுவாக பேச வேண்டும் என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டது. அண்மையில் தான் மிருதுவாகவும் அன்பாகவும் பேச வேண்டுமென இக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் மிருதுவாக என்னும் போது மிருதுவாக பிழையானதை கதைக்கலாம்.

## எட்டாவது

ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப்பற்றிக் குறைவாக பேசுவதும் இதுவும் ஒரு பைத்தியம் தான் இது பற்றி ஷிர்டி பாபாவின் சரித்திரத்தில் ஒரு சம்பவம் உண்டு.

ஷிர்டியுடன் சேர்ந்து இருவர் போகும் போது ஷிர்டி கூறுகிறார் அந்த வழியில் செல்லும் பன்றியைப் பார்க்கச் சொல்லி அந்தப் பன்றி அழுக்குகளையே உணவாக கொள்கிறது. அது போல நாமும் பிறரைப்பற்றி கெடுதலாகப் பேசும் போது நமது நாவினால் அவருடைய பாவங்களை நக்கி எடுக்கிறோம் எனறார்.

11ம் பக்கம் பார்க்க

ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகளும் ஆத்மீக முன்னேற்றத்திற்கான ஒரு செயல் வடிவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

## இவ்வுலகில்

இவ்வுலகில் சினத்தைத் தவிர
எதிரிவேறெதும் இல்லை
வறுமையை விட துன்பம்
வேறெதுவுமில்லை
ஞானத்தைத் தவிர சுகம்
தருவது வேறெதுவுமில்லை

- பாபா -

## நிம்மதி

மானுடா.....!
நீரிற்குமிழி வாழ்க்கை
நிலைக்கும் என்று நினைத்தாயா
பட்டுப் பீதாம்பரங்கள் புனைந்து
பகட்டாய் வாழ்ந்திடலாம்
தேனும் தினைமாவும் உண்டு
திடமாக வாழ்ந்திடலாம்.
ஆனால்!
பட்டுப் பீதாம்பரமும் தேனும் தினைமாவும்
பரிசாகத் தந்திடுமோ நிமமதியை
சத்யம் தர்மம், சாந்தி, பிரேமை
உன் வழியாகட்டும்
சேவையே மூச்சாகட்டும்
எதிரியை உன் இதயம் மன்னிக்கட்டும்.
ஆத்மஜோதி எங்கும் பரவட்டும்
அடையுமே உலகம் நிம்மதியுடன் கூடிய ஆனந்தம்

சு. தனுஜா
ஆனைக்கோட்டை

## உன்னடி பணிந்தேன்

நம்பி உண்டபேதைக்கு நஞ்சாலும் தீங்கில்லை!
கண்ணா..! என் பழவினைகள் வெறிமலங்கள் அகற்றி,
உந்தனுக்கே உண்மை அடியவளாய் வாழப்பலன் நல்கி
உன்பால் இழுத்து அணைத்து ஒளி தந்தாய்...!

பூமிக்குள் மனிதருக்குள் புனிதத்தைத் தேடுகின்ற - என்
அறியாமையே உன் எழில் கரத்தால் அடித்து
மெய் அருட்கையால் தடவி, குறை குடம்தான் மனிதன்,
கும்பிட்டால் ஆனந்தம் என்றுணர்த்தினாய்.

சிந்தையில் சுத்தம்பேணி, நாவினால் நாமம் பாடவைத்து - என்
முந்தை வினை ஒழிய, புற உலகின் வலை வீச்சை அகற்றி
அக உலகிறகுத் திசை திருப்பி நிறைவு தரும் கண்ணா...!
உன கழல் உணர்ந்து கொண்டேன், ஒளி பெறறேன்

கலப்படமற்ற உன் தூய பொற் பாதம் கண்டு பணிந்தேன்.
ஒளியிலலா என் இரவு இதயத்தை ஒளி செய்து உனதடிசேர்
கதியற்ற எனக்குக் கண்ணா...! நீயே. உன்னனடி பணிந்தேன்
இனறே நீ புயலாகி வந்து இறை நெறியில் எனைப்
பணித்தருள்வாய்

செ செல்வராணி
சண்டிலிப்பாய்

## அன்னையை மதி



பேதத்தை மிதி, அன்னையை மதி..!
அழகான அமுதூட்டும் கரம்...!
அன்னை பாசமதில் நீர் ஓடை...!
ஈர் ஐந்து மாதம் சுமந்து அகிலமதில்,
ஆளாக்கி விட்ட அன்னையை மதி...!
அன்னையும் தெய்வமும் ஒன்றே..!
அங்கு இங்கு வென்று அலையாதே..!
அன்பாய் உன் வீட்டில இருக்கும்,
அனனையை வணங்கி விடு...!
அற்புதமாக வாழ்வு துளிர்விடும் காண்பாய்..!

தங்கராசா. சுதர்ஷன்

## மேம்பாட்டுக் குணங்கள்

சுற்றும் பூமியிது சுழல்கின்ற அகிலமிது
பற்றுக் கொண்டால் இங்கே பரிதவிப்போம்
சற்று ஏதேனும் பற்றுகளை கொள்ளாது
வெற்று உடம்போடு மேலோராய் வாழ்வோமே

அன்பின் குணங்களான மேம்பாட்டு செயல்களையும்
பண்பில் உயர்ந்திட்டு பாரினிலே மேலோங்க
தென்பை ஊட்ட இங்கே தெய்வ அவதாரமாம்
அன்பின் அருளூட்டாம் பாபாவின் அறிவுரையில் வாழ்வோமே

சத்தியத்தின் தலைவனான சத்தியசாயிபாபாவின் கட்டளையில்
முத்தியிலே மேலோங்க முழுமை பெற்று வாழ்ந்திங்கு
பக்தியால் எல்லோரையும் ஞாலத்திலே அரவணைத்து - அன்பு
சக்தி இதுவென்று உணர்த்த் சரித்திரங்கள படைத்திடுவோம்

வாய்மையின் லட்சணமாய் அரிச்சந்திரனை வெல்வதற்கும்
அகிம்சையின் அகல் விளக்கு காந்திஜியை அறிவதற்கும்
தருமத்தின் தலைவனான தருமனை புகழ்வதற்கும - எம்
சருமத்தை நாம் கொண்டு 'சாயி' மார்க்கத்தில் வாழ வேண்டும்

கி. கிஷாந்

அறிவித்தல்

### இலவச வைத்திய சேவை

மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையத்தின
ரால் மாதம் ஒருமுறை நடாத்தப்படும் இலவச
வைத்திய சேவை இம்மாதம் 24ம் திகதி
சனிக்கிழமை மாலை 2.30மணி - 5.30மணி
வரை நடைபெறும.

Dr சிவராணி சிவசோதி
(தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி)
மற்றும் குழுவினர்

இடம்: மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையம் (பிரிவு I)
மகேசன்வீதி, நவாலி

அமைதியின் ஒரே இருப்பிடம் இறைவன் தான். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எத்தகைய கல்வியை நீங்கள் கற்றாலும் கடவுள் நம்பிக்கையைக் கைவிடாதீர்கள் கடவுள் நம்பிக்கையைக் கைவிட்டால் வாழ்க்கையைக் கைவிடலுக்கு ஒப்பானதாகும் வாழ்க்கையே கடவுள். நீங்கள் மனித மேம்பாடுகளுக்கான விழுமியங்களைக் காட்டுதலே கடவுளுக்கு தரும் காணிக்கையாகும்

- பாபா -

## சிட்டுக்குருவி

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
சிரிச்சி பறந்திச்சாம்

பட்டுவாலை ஆட்டி யாட்டி
பாட்டுப் படிச்சுதாம்

மெட்டுப் போட்ட தாய்க்குருவி
மெல்ல வந்திச்சாம்

கெட்டுப் போன தாளம் தன்னை
சுட்டிக்காட்டிச்சாம்

எட்டி நின்ற தந்தைக் குருவி
கிட்டே வந்திச்சாம்

கெட்டிக்கார குஞ்சை ஆட
கெஞ்சிக் கேட்டிச்சாம்

இ. கபேந்தனா
மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்

## மரங்கள்

பச்சை பச்சை மரமே
நீ படர்ந்து தானே வளர்வாய்
பாலை வனத்தில் மட்டும்
நீ ஏன் வளர்வதில்லை
தூய காற்றை தருபவனும் நீயே
வீட்டைத் தாங்கி நிற்பவனும் நீயே
எமக்கு உணவு தருபவனும் நீயே
நீ பல்லாண்டு காலம் வாழி!
நீ பல்லாண்டு காலம் வாழி!

ஆண்டு 7 மாணவிகள்
யா/ நவாலி மகாவித்தியாலயம்

## நல்லவை கற்போம்

நல்லவை பேசக் கற்றிடுவோம்
நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை செய்வோம்
தீயவை விலக்கிட முயற்சி செய்வோம்
தீமை விலக்கிட உதவி செய்வோம்

ஒற்றுமை உணர்வை ஊட்டிடுவோம்
ஒன்று பட்டே நாம் செயற்படுவோம்
ஒழுக்கமுடன் நாம் ஒழுகிடுவோம்
ஒருவர் ஒருவரை அன்பு செய்வோம்

பெற்றோரை நாமும் வணங்கிடுவோம்
பெரியோரை நாம் மதித்திடுவோம்
கற்பதை நாமும் வளர்த்திடுவோம்
கற்றபடி நாம் வாழ்ந்திடுவோம்

தர்சன்
மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை



## அன்புள்ளம் கொண்டவரே!

புட்டபர்த்தி வாழ்பவரே
புனிதமாய் இருப்பவரே;
வறுமைதனை போக்கிடுவீர்
வசந்தத்தை தந்திடுவீர்,

அன்புள்ளம் கொண்டவரே
அற்புதங்கள் செய்பவரே
பொறாமையை போக்கிடுவீர்
பொறுமையைத் தந்திடுவீர்

கருணை உள்ளம் கொண்டவரே
கண்ணிமை போல் எமை காப்பவரே
கல்க்கத்தை போக்கிடுவீர்
கல்விதனை தந்திடுவீர்.

சர்வமதத்தை வளர்ப்பவரே
சகலதையும் அறிந்தவரே;
சஞ்சலங்களை போக்கிடுவீர்
சமாதானத்தை தந்திடுவீர்

க. அனுஷா
வேம்படி மகளீர் கல்லூரி

## இரக்கமுள்ள யானை

ஓர் ஊரில் கொழுத்த யானை ஒன்று இருந்தது. அந்த யானைக்கு ஒரு பாகன் இருந்தான். அவன் இந்த யானையை வைத்து பாரமான வேலைகளை செய்தான். யானையும் அதற்கு உடன்பட்டு செய்தது.

ஒரு நாள் அந்த யானை அவன் சொன்ன வேலையைச் செய்யவில்லை பாகனுக்கு கோபம வந்தது. அந்த யானைக்கு அடித்தான். யானை அவனை தன் தும்பிக்கையால் தூக்கி எறிந்து நசக்கிப் பிழிந்தது; அவன் இறந்தான்.

அந்தப் பாகனுக்கு ஏழு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுக்கு வறுமை தலைவிரித்தாடியது ஒவ்வொரு பிள்ளைகளும் ''அம்மா பசிக்கிறது'' என்று கத்தினார்கள்.

தாய் ஏழு பிள்ளைகளையும் யானை இருக்கும் இடத்தில் எறிந்தாள். யானை அவர்களின் வீட்டு நிலையை அறிந்தது. மூதல் பிள்ளையை தன் தும்பிக்கையினால் தூக்கி தன் முதுகில் ஏற்றியது. அவன் கூறிய வேலைகளைச் செய்தது இதனால் அந்தக் குடும்பத்திற்கு நல்ல ஊதியமும் வாழ வழியும் கிடைத்தது.

கு. தனுஜா
யா/ இந்து மகளீர் கல்லூரி

## நீங்களும் எழுதலாம்

சாய்ராம்..!

நீங்கள் எழுதி அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள் ஆன்மீகச் செய்திகள் எல்லாம் கிடைத்த வண்ணம் இருக்கிறது. சந்தோஷம்; தொடர்ந்தும் உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி,

ஆசிரியர் இறைதூதன்
மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையம்
ஹலக்லேன் மானிப்பாய்

இன்றைய மாணவர்கள் நாளைய ஆசிரியர்கள். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு எனக்கு இல்லையென்றால்

எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை "ஏழைகளுக்கு உதவுவதும் பசித்தோருக்கு உணவளிப்பதும் ஆடை இல்லாதவர்களுக்கு ஆடை வழங்குவதும் குறையுள்ளோர்க்கு பொருள் ஈவதும் சாலச் சிறந்த அறச் செயல்களே. பிறர்க்கு உதவி செய்தல் போற்றத் தகுந்த குணமே.

எனினும் பெயர் பெறுவதற்காகவும் புகழ் அடைவதற்காவும் அது ஒருவன் செய்யின் அச் செயல் அவனுக்கு ஒரு சிறிதும் பயன்படாது வாணிக முறையில் செய்யின அது கடும் பொருள் நஷ்டத்தையே பிறப்பிக்கு.. இந்த முயற்சியில் ஒருவன் இட்ட ஒவ்வொரு காசும் அவனுக்குச் சாபத்தையே விளைவிக்கும்.

இதற்குப் பின் வருவது இரத்த சாட்சியாக உயிர் துறப்பது "தான் என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும் அன்பு உனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" மகிமைக்காக என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்பட நான் ஒப்புக் கொடுத்தாலும் என் சில வியாக்கியானங்கள் கூறுகின்றன. தம கொள்கையை விடடுக் கொடுப்பதைப் பார்க்கிலும் ஏசு பெருமானுக்காக இணையற்ற தியாகம் செய்ய முன் வந்த ஹஸ் போலவும் ஜெரோம் போலவும் நடந்து கொள்வது அதிசயமான காரியம்.

## லிராய் ஈஃரும்

அவ்விருவரும் சத்தியத்திற்காக எவ்வளவு உறுதியாய் நின்றார்களென்றும் வரலாறு நமக்கு நினைவிலிருக்கும். பகைவர் சமய பேதத்தை நாட்டை விட்டு நீக்குகின்றோம் என்று சொல்லிக் கொண்டு அவர்களை நெருப்பில் எரித்துக் கொன்று அவர்களுடைய சாம்பலை ரையின் ஆற்றில் கலக்கி விட்டனர்.

ஆனால் அப் பகைவர் எண்ணத்திற்கு எதிராக அச் சாம்பல் ரையின் ஆற்றிலிருந்து பக்கத்திலுள்ள கடலுக்குப் போய் பின் ஏழு பெருங் கடலுக்குச் சென்று பூமியின் ஐந்து கண்டங்களிலும் வந்து உலகிலுள்ள நாடுகள் அனைத்திலும் பரவி விட்டது இன்று அவர்கள் சாம்பல் வாயிலாகவும் சத்தியம் பரவுகின்றது.

இவ்வாறு தன் உடம்பினை சுட்டெரிக்கப் படுவதற்கு ஒருவன் ஒப்புக் கொள்ளலாம் எனினும் அதனால் அவனுக்குப் பயன் ஒன்றும் இல்லை. அப்படியானால் தேவையானது. என்ன? மேலான நோக்கங்களே தேவை அன்பு பரிபூரணத் தன்மையுடையதாய் இருத்தல் இன்றியமையாத காரியம் என்பதையே இது வற்புறுத்துகின்றது.

இனி அடுத்த பாகத்திற்குச் செல்வோம் பவுலார் இங்கே அன்பிற்கு இலக்கணம் கூறி பாகுபாடு செய்கிறார் விளக்கிக் காட்டினாலன்றி அன்பு என்னவென்று நாம் அறிந்து கொள்ளல் அரிது அன்பு என்று பேசும்போது குறிப்பான வகையாய் அதின் பொருள் நமக்கு விளங்கிறதில்லை. ஒளி வடிவம் அற்ற பொருள்

ஒளிக் கதிரை முப்படைக் கண்ணாடியின் வழியாகச் செலுத்தும் போது அது சிவப்பு ஆரஞ்சு. மஞ்சல், பச்சை, நீலம், ஊதா என்னும் பல பாகங்களாகப் பிரிகின்றது. அவ்வாறே பவுலாரும் அன்பை ஆவியின் முப்பட்டைக் கண்ணாடியின் வழியாக ஊடுருவச் செய்து, அதைப் பலபாகங்களாகப் பிரித்துக் காட்டுகிறார். அவற்றின் தொகை பதினைந்து. முதலாவது அவர் குறிப்பிடுவது பொறுமை.

தொடரும்



# ஐந்து புலன்களையும் நல்ல முறையில் பயன்படுத்துங்கள்

ஒருமுறை பண்டிதர்ஒவரூர் புத்தரை அணுகி தன்னிடம் வாதிட வருமாறு சவால் விடுத்தார் அதற்கு அவர் கொடுத்த உறுதி மொழியில் தான் புத்தரிடம் தோற்றுப் போனால் தன்னுடைய மூவாயிரம் சீடர்களுடன் புத்த மதத்தில் இணைந்து வாழ்நாள் முழுதும் புத்தருக்கு சேவை செய்யத் தயாராய் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அதே போல் புத்தர் தோற்றுப் போனால் அவரது வாழ்நாள் முழுவதும் அந்தப்பண்டிதருக்கு அடிமையாகப் பணிபுரிய வேண்டும் என்றார் புத்தர் புன்முறுவலுடன் கூறினார்.

ஒரு உண்மையான பண்டிதன் அனைத்தையும் சம பாவத்தில் காண்பான் அவனுக்கு வாழ்க்கையின் இரட்டை நிலைகளான இன்பம் துன்பம், மகிழ்ச்சி துக்கம் இவற்றில் எல்லாம் வேறுபாடு எதுவும் தெரியாது. கோபமும் அகங்காரமும் மிக்கவனை பண்டிதன் என அழைக்க இயலாது

மனதிற்கு கட்டளையிடக் கூடியவன் இவ்வுலகில் எவனும் இல்லை இறைவனுக்கு மட்டுமே அந்த சக்தி உண்டு இவ்வாறு விளக்கிச்கூறி, புத்தர் அந்தப் பண்டிதரை அமைதியாக்கினார்.

அவரது ஆடம்பரத்தையும் பட்டாடோபத்தையும் அகங்காரத்தையும் கைவிடும்படி அறிவுறுத்தினார் உலகியல் அறிவை வைத்துக்கொண்டு எதையோ அடைந்து விட்டதாக வீண்பெருமை கொள்ள வேண்டாமென அறிவுரை கூறினார்.

நான் எத்தனையோ ஆன்மீக முறைகளை மேற்கொண்டு எத்தனையோ புனித நூல்களைப் படித்து ஆத்ம ஞானம் அடைய வழி தேடினேன கடைசியில் புலன்களை அடக்குவது என்பது ஆத்ம ஞானம் அடைய மிகவும் அவசியமானது எனப் புரிந்து கொண்டேன்.

இந்த ஐந்து புலன்களும் இறைவன் நமக்கு அளித்த பரிசு. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்துங்கள் அப்போது தான் ஆத்மஞானத்தை அடைய முடியும். புனித நூல்களைப் படிப்பதாலும் ஆன்மீக சாதனைகள் மேற் கொள்வதாலும் பலன் ஒன்று மில்லை. முதலில் புலன்களை அடக்க வேண்டும். அதில்லா விட்டால் எந்த முயற்சியும் பயனளிக்காது,

நான் எனது ஐம்புலன்களையும் அடக்கி அவற்றை சரியான பாதையில் செலுத்துகிறேன் அதன் காரணமாக நான் ஆனந்தத்தை அனுபவிக்கிறேன். என்று புத்தர் கூறினார்.

# முஹம்மத் நபி அவர்கள்

## வாழ்க்கை வரலாறு

சென்ற இதழ்தொடர்ச்சி......

இவரின் அருங்குணங்களையும் நாணயத்தையும் கேள்வியுற்ற விதவையான கதீஜா எனும் செல்வச் சீமாட்டி தமது வர்த்தகப் பொறுப்பை ஏற்று சிரியாவுக்குச் சென்று வருமாறு இவரை வேண்டினார் இவர் அப்பொறுப்பை ஏற்று செவ்வனே நிறைவேற்றினார். இதனால் மகிழ்வடைந்த கதீஜா சீமாட்டி இவரைத் திருமணம் செய்ய விரும்பினாள் எனவே இரு குடும்பங்களினதும் விருப்பத்தோடு இவர்களிருவருக்கும் விவாகம் நடைபெற்றது.

### தீர்க்கதரிசியாதல்

வாலிபரான முஹம்மத், மக்காவுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு மலைக்குகையிலே தனிமையாக இருந்து சிந்தனை செய்து வந்தார் இறைவனைப் பற்றியும் அவருடைய படைப்புக்களைப் பற்றியும் அவற்றின் இரகசியங்களைப் பற்றியும் சிந்தித்து வந்தார். ஒரு நாள் அல்லாவின் தூதரான ஜிப்ரில் அங்கே தோன்றி,

'முஹம்மதே, ஓதுவீராக'' என்றார். எவ்வாறு எதனை ஓதுவேன் என்று முஹம்மத் கேட்டார் யாவற்றையும் படைத்த உம் இறைவனின் பெயரால் ஓதுவீராக என்றார், ஜிப்ரீல் எனவே முஹம்மத் நபியும் ஓதினார்.

இந் நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்ற முஹம்மத்நபி தம் வீட்டுக்குத் திரும்பினார். நடந்தவற்றைத் தம் மனைவியிடம் கூறினார். இதைக் கேட்ட கதீஜா சீமாட்டி தம் கணவரை தம் பெரிய தந்தையின் மகனிடம் அழைத்துச் சென்றார்.

தொகுப்பு: **பத்மா**

விவிலிய நூலையும் ஏனைய புனித நூல்களையும் அறிந்திருந்த அவர் முஹம்மதை நோக்கி,

'உம்மிடம் வந்தவர் ஜிப்ரில் அவர்களே நீர் இறைவனின் தூதராக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்,'' என்றார். தம் கணவரின் நற் குணங்களை நன்கு அறிற்திருந்த கதீஜா சீமாட்டி அவர் கூறியவற்றை நம்பினார்

தொடரும்

அன்பு செலுத்துதலே அன்பின் பரிசு - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணசேகர்

## இரண்டாவது பரிசு பெறும் சிறுகதை

சேற்றிலே செந்தாமரை மலர்கிறது. சிப்பியிலே முத்து விளைகிறது. பட்டம் வெட்டிய பின் தானே வைரம் மிளிர்கிறது. இப்படியாக சேகர் அந்த வறுமைக் குடும்பத்தில் பிள்ளையாக வளர்ந்தான். நற்குணத்தில் ஆழமாக பதிந்து விட்ட அவன் எந்த வேலைகள் செய்தாலும் மற்றவர்கள் போற்றக் கூடியதாகவே இருந்தது தந்தையாரின் குறைந்த வருமானத்தில் வளர்ந்த அவன் எதையும் நிறைவாகவே கருதினான்.

சில வேளைகளில் உணவு கிடைக்காத போதிலும் அதை பெரிதாக பொருட்படுத்துவதில்லை. இருந்தால் உண்போம் இல்லையேல் தண்ணீர் தாராளமாக உளதே என்று செயல்படக் கூடியவன். இவையெல்லாம் தனது பெற்றோர்களின் அறிவுரைகளிலிருந்து சேகர் பெற்றுக் கொண்டதாகும் இவனுடைய நற்பழக்கங்களால் வறுமையில் இருநத பெற்றோர் திருப்தி அடைந்தனர்.

பாடசாலைக்குச் செல்லும் பருவம் அடைந்தும் வீட்டிற்கு அயலிலுள்ள பள்ளியில் இவனைப் பெற்றோர் சேர்த்தனர். அந்த சிறிய உள்ளத்தில் நிறைவான நல்ல சிந்தனையும் செயல்களும் இருந்ததில் அங்குள்ள ஆசிரியர்களால் புகழப்பட்டான். ''யார் பெற்ற பிள்ளையோ'' என்று பெருமிதத்துடன் கேட்குமளவிற்கு அவனின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

> *சிறந்த கல்வியறிவும், மிகுந்த ஆற்றலும் கைவரப் பெற்றாலும் நன்நடத்தை என்னும் சீலம இல்லாவிடில் என்ன பயன்...? பயனற்ற பல ஏக்கர் நிலம் இருந்து என்ன பயன்_? பயனுள்ள சிறிய நிலம் இருந்தாலே போதும்*
>
> *- பாபா -*

ஆசிரியர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிவது சக மாணவர்களுடன் அன்பாகப் பழகுவது, படிப்பிக்கும் வேளைகளில் அவதானமாக இருப்பது, விளையாட்டுக்காக ஒதுக்கப்படும் நேரங்களில் மட்டும் விளையாடுவது போன்ற செய்கைகள் ஆசிரியர்களைப் பெரிதும் கவர்ந்தன. இதனால் அவ்வகுப்பு மாணவத்தலைவனானான் வகுப்பாசிரியர் வராத நேரங்களில் அதன் பொறுப்பு முழுவதும் இவன் கையிலே இருந்தது. குழப்பம் செய்யும் சக மாணவர்களுக்கு அறிவுரைகளை அன்புடன் வீசுவான். இதனால் வகுப்பு மாணவர்களும் இவனுடன் பிரியமாகவே இருந்தனர்.

பாடசாலையில் நடை பெறும் பரிசளிப்பு விழாக்களில் ஒழுங்கான மாணவர்களுக்கான பரிசு தொடர்ச்சியாக எட்டு வருடங்களுக்கு இவனுக்கே கிடைத்தன, ஒழுங்கான வரவு சுத்தம் பேணுதல், பெரியோருக்கு கீழப்படிதல், பாடசாலையின் முன்னேற்றகரமான காரியங்களில் முழுமையாக ஈடுபடல் போன்றவைக்கே இப்பரிசுகள் கிடைத்தன.

''பொய் சொல்லக் கூடாது பாப்பா என்றும் புறஞ்சொல்லலாகாது பாப்பா'' என்று சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாப்பாப்பாட்டும் இவனின் குணத்தை ஒத்திருந்தன இப்போது இவன் க பொ. த சாதாரண பரீட்சைக்கு காலடி வைத்து விட்டான் கல்வியறிவு தான் அவனிடத்தில் குறைவாகவே இருந்தது. வீட்டிலும். கல்விச்சாலையிலும் ஒழுங்காக இருந்தும இச்செல்வம் இவனுக்கு கிடைக்காதது துர் அதிர்ஷ்டமே.

இவனைப் படிப்பித்து நல்ல முழுமனிதனாக்குவதற்கு முனைந்தனர் வறுமையில இருப்பவனுக்கு கல்வியிலும் வறுமை ஏற்படுவதை இட்டு பாடசாலையில் எல்லோரும கவலையடைந்தனர் விசேட வகுப்புக்களை இவனுக்கு நடாத்தியும் ஒட்டைக் குடத்தில் தண்ணீா ஊற்றியது போல் இருந்தது. குணத்தில நிறைகுடம் தழும்பாது இருந்தவன் கல்வியில் ஓட்டைக்குடம் போலவே இருந்தான்.



இவன் கல்வியில் பின்நிற்கும் போது எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறான். என்பதையும் இவனின் தந்தையார் வறுமையில் வாழ்ந்தது போல் இவனும் எதிர்காலத்தில் தள்ளுப்படப்போகிறான் என சிந்தித்தனர் இவனின்நற்குணத்திற்கு எப்படியும் ஒரு ஆசிரியராக்கி விட்டால் எத்தனையோ பிள்ளைகள் நற்குணங்களை பெற்று இச்சமுதாயத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாகுவர் என்று நம்பியிருந்த ஆசிரியர்கள் ஏமாற்றம் அடைந்தனர்,

**செல்வி. இராசயோகன் கலைவாணி**
**மானிப்பாய் மகளீர் கல்லூரி**

பாடசாலையிலிருந்து வெளியேறும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது வெளியேறும் மாணவர்களுக்கு பிரிவு உபசார விழா ஒன்றை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டது நல்ல மாணவன் என்ற பரிசைப் பெற்றுக் கொண்ட சேகருக்கு மண்டபத்தில் விசேடமாக பாடசாலை மாணவர்கள் எல்லோரும் சேகரை மாலைகளால் அலங்கரித்தனர். ஆசிரியர்களால் புகழ் மாலை சூட்டப்பட்டான். பெற்றோர்கள் சார்பில் அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்பட்டது பழைய மாணவர் சங்க சார்பில் அவனின் நற்பழக்கங்கள் சம்பந்தமாக கவிதை மடல் வாசிக்கப்பட்டது, கூட்டம் முடிவடையும் நேரம் நெருங்க நெருங்க ஆசிரியர்களும் மாணவர்களும் கவலை கொள்ளத் தொடங்கினர். பலர் அவனை ஆரத்தழுவி அழுதனர் அதிபர் தனது தாயை 'இழந்தது போல கவலை கொண்டார். வருங்காலத்தில் பழைய மாணவனாக இப்பாடசாலைக்கு சேவை செய்ய வேண்டுமென பலரும் கேட்டுக்கொண்டனர்.

பழைய மாணவனாக இருக்கும் பொழுது இவன் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளராக தெரிவு செய்யப் பட்டான் எல்லோரும் எதிர்பார்த்தது போல் பாடசாலையின் முன்னேற்றமான காரியங்களில் முழு மூச்சுடன் செயல்பட்டான் பாடசாலையில் நடை பெறும் விழாக்களில் அழைக்கப்படும் பெரியவர்களில முக்கியமான ஒருவராக உயர்ந்து விட்டான். இந்த நல்ல இளைஞனை பெற்ற பாடசாலை பெருமை கொண்டது,

இப்பாடசாலையில் அரசாங்கத்தால் நடத்தப்படும் பொதுப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு முதல் நாள் மாதா பிதா, குரு, தெய்வம் என்ற நிகழ்வு நடைபெறுவது ஒரு வழக்கமாக இருநதது அதிபர் ஆசிரியர் மற்றும் வருகை தரும் பெரியவர்களிடம் மாணவர்கள் ஆசியைப் பெறுவதே இதன் நோக்கமாகும் இவ்விழாவிற்கு சமயகுருமார்களும் சமூக சேவையாளர்களும் மாணவர்களின் பெற்றோர்களும் அழைக்கபபடுவர் இதன் நோக்கம் இம் மூனறு தெய்வங்களையும் இறைவனாக மதிக்க வேண்டுமென்பதை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுவதாகும் இந்த விழாவுக்கு பிரபல்ய சமூக சேவையாளரான தொழிலதிபர் ஒருவர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார்

> *வீர சிவாஜிக்கு கலவியறிவு குறைவு ஆனால் நற்குண சீலன். தைரியத்திலும் வீரத்திலும் சிறந்து விளங்கினான் நீதி நெறியிலும், தர்மத்திலும் சிறந்து விளங்கினான். நாட்டில் தர்மத்தை நிலை நாட்ட விரும்பினான் அதற்காக போரிடவும் துணிந்தான். நாட்டையும் வென்றான், மக்கள் நலனுக்காக அர்ப்பணித்தார். அவன் மகன் சம்பு வீரம் மிகுந்தவன், ஆனால் சிவாஜி போல சம்பு குணசீலன் அல்ல எனவே சிவாஜி பெற்ற பேரும் புகழும் சம்பு பெறவில்லை.*
>
> *- பாபா*

அங்கு அவர் தனது உரையில் தனது ஸ்தாபனத்தில் வேலை செய்யும் அனேக மாணவர்கள் நற்குணம் படைத்தவர்களாய் இருப்பதால் தனது ஸ்தாபனம் உயர்வடைந்து செல்வதை வலியுறுத்தி மாணவர்கள் கல்வியோடு நின்று விடாது சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை போன்ற மேம்பாட்டுக் குணங்களை பாடசலையில் கல்வி கற்கும் அந்த நல்ல நாட்களில் பெற்றுக் கொள்ள வேண்டும். என்று சேகர் போன்ற நல்ல மாணவர்கள் இப்பாடசாலையில் பலர் உருவாக வேண்டுமென்றும் கல்வியை மட்டும் பெற்றுக் கொண்டு சமுதாயத்தில் வாழ முடியாது என்றும் நற்பழக்கமுடைய மாணவர்களுக்கு கல்வியறிவு குறைவானாலும் பெரிய பதவிகள் கொடுப்பதற்கு எமது ஸ்தாபனம் என்றுமே காத்து இருக்கிறது சேகர் என்ற அந்த மாணவன் நற்பழக்கத்தில் சிகரம், என அதிபர் ஆசிரியர்களால் சிபார்சு செய்யப் பட்டமையால் உயர்ந்த பதவி ஒன்று வழங்குவதற்கு தீர்மானித்துள்ளேன் என்று கூறியபோது மேடையே அதிரும்படி எல்லோரும் கைதட்டி ஆரவாரித்தனர்.

இப்போது சேகர் ஒரு உயர் பதவியைப் பெற்றுக் கொண்டான் உயர்ந்த குணங்களும் எல்லோரின் ஆசியும் அவனது வறுமையை நீக்கி நல்வாழ்வுக்குவித்திட்டது.வேலைகளோடு நின்று விடவில்லை. தொடர்ந்தும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டுக்கும் ஒரு பெரிய சமூக சேவையாளனாக தனது வாழ்க்கையைப் அர்ப்பணித்து குணசேகர் ஆனான்.

ஒருவனது சுயநல இச்சைகளைத் துறக்கும் விருப்பத்தை நல்லொழுக்கம் கொண்டிருக்கும். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியமே நித்தியம்

★ இரண்டாவது பரிசு பெறும் சிறுகதை ★

அது ஒரு செழிப்பான கிராமம். அந்தக் கிராமத்தில் தான் அந்த செல்வந்த குடும்பத்தின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது அவர்கள் பணம் தான் எத்தனையோ குடும்பங்களை வாழவைப்பது போல் இருந்தது. ஸ்ரீமான் சுந்தரேசன் என்றாலே அந்தக்கிராமமே கும்பிடுமளவிற்கு அங்கு அவரது பணம் விளையாடிக் கொண்டு இருந்தது

அந்த சுந்தரேசன் வீட்டில் தான் ரத்தினமும் வேலைக்காரியாக இருந்தாள். காலை எட்டு மணிக்கெல்லாம் வந்தால அங்கு வேலை முடித்து அவள் வீடு செல்ல மாலை ஐந்தாகும. அதற்குள் தன்னையே அர்ப்பணித்து உழைப்பாள் அப்படிச் சம்பாதித்த அந்தப் பணக்கார வீட்டுப் பணத்தில்தான் அந்தக் குடும்ப ஜீவனம் ஓடிக் கொண்டிருந்தது.

ரத்தினத்திற்கு ஒரே மகள் நிரஞ்சலா அவள் படிப்பு தொழில் எதுவுமில்லாதிருந்தாள். அவளிடம் இருப்பது ஆபத்தான அழகு மட்டுமே, வஞ்சம் சூதற்ற நிரஞ்சலா தாயின் உழைப்பில் அன்றாட ஜீவனத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள். எனினும் தந்தையிலலாத அவள இளமையின் வறுமையிலேயே இருந்தாள.

## T. சத்தியசிலி

நிரஞ்சலா இப்போது திருமணவயதை எட்டியிருந்தாள் அதுவே இப்போ தாய்ரத்தினத்தின் மனதில் பெரும் சுமையாக நிழலாடிக்கொண்டிருந்தது 'கடவுளே எப்படியாவது நல்ல ஓர் இடத்தில் என்பிள்ளையை கட்டிக் கொடுத்திட வேண்டும் அவள் பிறந்த வீட்டின் கஷ்டங்கள் புகுந்த வீட்டிலும் அவளை தொடரக் கூடாது அவளின் சந்தோஷமான வாழ்க்கையைக் கண்டால் தான் நான் நிம்மதியாககண் மூடலாம்.' ம் என்று பெருமூச்சு விடுவாள்.

இப்படியிருக்கையில் ஸ்ரீமான் சுந்தரரேசனின் ஒரே மகன் மோகன் ராம் நிரஞ்சலாவின் அழகில் மயங்கி அவளைத் திருமணம செய்ய விரும்பினான் விருபபத்தை தன் தந்தையிடம் தெரிவித்தான் அவரோ ''எம்முடைய தகு என்ன பணமென்ன அந்த ஏழையை திருமணம் செய்து நீ எதைப் பெரிதாக காணப்போகிறாய் அதைவிட பெரிய இடத்தில் நாகரீகமான பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்று சொன்னார் ஆனால் மகனின் பிடிவாதத்தால் தலையாட்டி விட்டார் சுந்தரேசன்.

மறுதினமே மோகன் ராம் அந்த ஏழையின் வீட்டிற்குச் சென்று விடயத்தைக் கூறினான். தாய் ரத்தினத்தால் இதை உள்வாங்க முடியவேயில்லை அவர்கள் மனம் சந்தோஷத்தால் துடித்தது இது நிஜமா? இது நடக்குமா? என்ற கேள்விகள் எழுந்து மடிந்து கொண்டிருந்தன. ஆனால் எல்லாம் நிஜமாகவே இருந்தது மோகன் ராம் நிரஞ்சலா திருமணம் நடந்தேறி முடிந்தது.

அன்று அந்தத் திருமணத்தின் பின்னரே ரத்தினம் தன் மகளைக் காணவேயில்லை. புகுந்தவீட்டிலேயே அவள் அடைபட்டு விட்டாள். அந்தப் பணக்கார வீட்டுச் சம்பந்தத்தில் ஏதோ எதிர்பார்த்த அவள் தனது சம்பாத்தியத்தையும் மகளின் அருகாமையையும் இழந்திருந்தாள். கூடவே நின்மதியும் பறிபோய் விட்டது. எது சத்தியம் என்றறியாத அந்த உள்ளம் உலக வாழ்க்கையில் எதை எதையோ நம்பி ஏமாந்து விட்டது. அப்படியே அவள் ஆயுளும் முடிந்தது.

மகளோ தன் தாயின் இறுதி கிரியைகளிற்கூட பங்குபற்ற முடியாது திணறினாள். ஏனெனில் அவள் இப்போ பணக்கார வீட்டு மருமகளாச்சே அவள் பணத்திலே வாழ்க்கைப்பட்டு இப்போ அந்தப்பணமே விலங்காகி விட்டது. இந்த சமயத்தில் வெளியூர் சென்ற கணவன் திரும்பி வரவேயில்லை அவளோ கர்ப்பமாகியிருக்கிறாள். இந் நிலையில் அவள் கண்ணீருடன் காலம் கழித்து வந்தாள். இப்படியே காலம் ஓடியது. இப்போது அவள் நிறைமாதத்தை அடைந்திருந்தாள். இனியும் என் கணவனின் தொடர்பின்றி அவர் எங்கிருக்கிறார் என்று கூட அறியாது இருக்க முடியாது என நினைத்தாள.



தன் மாமனார் சுந்தரேசனை கெஞ்சி மன்றாடிப் பார்த்தாள் பின்னர் உடுத்த புடவையுடன் கையில் சிறிய பணத்துடன் தன் கணவனைத் தேடிப் புறப்படுகிறாள். அவன் சென்ற ஊர் மட்டும் தான் அவளுக்கு தெரியும். முகவரியே தெரியாத அவனை எங்குதான் தேடுவது? ஆனால் மனதின் போராட்டங்கள் உந்த அவள் ரயிலில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். ரயிலின் நீண்ட பயணம் போல் அவளது சிந்தனைகளும் முற்றுப் புள்ளியில்லாமல் நீண்டு கொண்டிருந்தன அந்த ஊர் வந்ததும் அவள் ரயிலில் இருந்து இறங்கினாள் மனதிலே கவலைகளின் பாரம் கூடவே வயிற்றில் வளரும் சிசுவின் பாரம் சுமக்க முடியாமல் அவள் கால்கள் தள்ளாடித் தள்ளாடி நடக்கத் தொடங்கின.

அவள் அந்த ஊரிற்கு வந்து ஐந்து நாட்களோடி மறைந்து விட்டன ஆனால் கணவனின் நிழல்கூட அவள் கண்களில் படவேயில்லை. அவள் நடந்து நடந்து பாதங்கள் புண்ணாகிப் போயின பசியோ அவள் குடலை புரட்டியது இத்தனை நாட்களும் அவள் கை உணவை அளையவேயில்லை. இந்த நிலையில் அவள் வாழ்க்கை மேல் வெறுப்புற்றாள்.

முன்பு வறுமையிலும் நான் நின்மதியாக இருந்தேன் இன்று ஏமாந்து போனேனே அந்தப் பணம் இன்று என்னை அநாதையாய் அலைய வைக்கிறதே என்று புலம்பிப் புலம்பி அழுதாள்.

அழுதே வீங்கிய முகமும் புழுதி படிந்த அந்த சேலையும் எத்தனையோ நாட்கள் வாராது முடிந்த தலையுமாக அவளது தோற்றம் பார்ப்போருக்கு பைத்தியக்காரி போல் தென்பட்டது அப்படியே அவள் பெருந்தெருவால் நடந்து கொண்டிருக்கிறாள் அங்கே ஒரு உணவு விடுதி தென்படுகிறது அந்த விடுதிக்குள அவள் நுழைகிறாள்.

அந்த வேளை ஒரு கார் வந்து நின்றது. நிரஞ்சலா திருமபி அந்தக்காரைப் பார்த்தாள் அந்தக் காருக்குள் இருப்பது நிஜமாகவே அவள் கணவன் தான் ஆனால் அங்கு கணவனுடன் கூடவே தாலியுடன் ஒரு பெண்ணும் இருந்தாள்.

நிரஞ்சலாவிற்கு மனதிலே கணவனைக் கண்ட பூரிபபு ஓடுகிறாள் அந்தக்கரை நோக்கி. மோகன்ராம் அவளை கண்டுக்விட்டான் உடனே காரை ஸ்ராட் செய்தான் அருகிருந்த இளம் மனைவி,

யார் அந்த பெண், உங்களைக் கண்டதும் ஓடி வருகிறாள். நீங்களோ ஓடி விடப் பார்க்கிறீர்கள் என்று கேட்டாள் அதற்கு அந்த மோகன் ராம்

> இவ்வுலகம் அநித்தியமானது சுகம் இல்லாதது. இது ஒரு தூக்கநிலை. தூக்க நிலையில் எவ்வளவோ துன்பங்களை அனுபவிக்கிறோம். இதற்கு எத்தகைய பரிகாரம் தேவை...? அறியாமை என்ற உறக்கத்தில் இருந்து எழுந்தால் அதுவே போதும் தேகாபிமானம் இருப்பதால் தான் இவை அனைத்தும் நம்மைப் பின் தொடர்கின்றன சிறிது சிறிதாக உடல் பற்றுதல் உணர்வை விலக்கிக் கொண்டே வரவேண்டும.
>
> — பாபா —

அவள் எங்க வீட்டு வேலைக்காரி இப்போ பைத்தியம் பிடித்து அலைகிறாள் இப்ப என்னை கண்டதும் 'என் புருஷன்' என்று ஏதேதோ உளறுவாள் அதுதான் நாம் போயிடுவோம் என்று பெரும் உண்மையை மறைத்து பொய் சொல்லி காரில் வேகமாக பறக்கிறான்

அந்த கார் தெருவைக் கிழித்துக் கொண்டு ஓடி மறைகிறது. நிறைமாதக் கர்ப்பிணி நிரஞ்சலாவோ கார் போன பாதையில் ஓடிக் கொண்டிருக்கிறாள அவளிற்கும் அந்த காரிற்குமிடையில் பெரும் இடைவெளி வந்து புள்ளியாகி கார் மறைகிறது.

11ம் பக்கம் பார்க்க

ஆனந்த நிலையை அடைய விரும்பும் ஒவ்வொருவரும் உடல்பற்று உணர்வை விலக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளிடம் ஒரு கேள்வி

இராம பக்தரான துளசி தாசர் என்ற என்ற பெரிய சாது. அவர் இறைவனை ஏணிப் படிகளின் வழியாக பூவுலகுக்கு இறங்கி வருமாறு அழைக்கிறார் ஏணி என்றால் அதன் மூலமாக ஏறி மேலேயும் செல்லலாம் கீழேயும் இறங்கி வரலாம்.

துளசி தாசர் அமைத்துள்ள ஏணி ''ஆன்மீக சாதனை'' என்று சொல்லக் கூடியது. அந்தச் சாதனைகளில் ஈடுபடும் அன்பர்களிடம் இறங்கி வருமாறு பகவானை துளசி தாஸர் அழைக்கிறார்.

''பிரபோ! நாங்கள் இந்தப் பூமியில் நிற்கிறோம் இங்குள்ள நாங்கள அனைவரும் இந்த ஏணியின் வழியாகத் தான ஏறி வந்து உங்களை அடைய முடியும். தாங்கள் தான் பெரிய அறிவாளி ஆயிற்றே நான் கேட்கும் ஒரு கணித வினாவுக்கு பதில் கூறுங்கள். அதாவது இங்குள்ள மக்கள் அனைவரும் ஒவ்வொருவராக உங்களை வந்தடைய எவ்வளவு காலம் பிடிக்கும்? நாங்கள் எப்போது வந்து உங்களை அடைய முடியும்? ஏன் மௌனமாக இருக்கிறீர்கள் இந்த அற்ப கணக்குக்கு கூடவா பதில் தர முடியவில்லை? எங்களுக்கு ஏன் இந்தத் தொல்லை ஏணிப் படிகள் மூலமா நாங்கள் அனைவரும் ஏறி வருவதற்குப் பதிலாக தாங்கள் ஒருவர் கீழே இறங்கி வந்தால் எங்கள் அனைவரையும் உய்விக்கலாம் அல்லவா?

இவ்விதம் துளசிதாசர் தமது பக்தி பாவத்தினால் இராமபிரானைக் கூட்டிக் கொண்டு வந்து பாமரமக்கள் முன் நிறுத்தி விடுகிறார்.

தொகுப்பு: சங்கரிபுத்திரன்

## இறைதூதன் சிறுகதை கவிதை போட்டிகளின் பரிசில்கள் வழங்கும் தினம்

இறைதூதன் சிறுகதை கவிதைப் போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று பரிசில்களையும் பெற்றோர் தயவு செய்து உங்கள் பரிசுகளைப் பெற்றுக கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

எமது மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையத்தில் ''குருபூர்ணிமா'' தினமாகிய 28 - 07 - 99 அன்று பரிசில்கள வழங்கப்படும். இது பற்றிய விபரம் கடிதமூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

– ஆசிரியர் குழு –

2ம் பக்கத் தொடர்ச்சி

ஆசைக்கு ......

எது நல்லது எது தேவையற்ற காரியம் என்று அறிந்து அதற்கு ஏற்ப நேரத்தை வகுத்து நடகக பயிற்சி பண்ண வேண்டும். மற்றவர்களின் தனிப்பட்ட பிரச்சினையில் நாம் தலையிடக் கூடாது. தீய சிந்தனைகளாலும் நரம் வீணாகும்.

சக்தி

சரீர சக்தி, உள சக்தி ஆத்மீக சக்தி என்ற இந்த மூன்று சக்திகளையும் வீணாக்கக் கூடாது வீண் சண்டை சச்சரவுகள் மூலம் சரீர சக்தியையும் தேவையற்ற யோசனை, கோபம் கொளளல் மூலம் உள சக்தியையும் தீயவற்றைப் பார்ப்பது பேசுவது நினைப்பதன் மூலம் ஆத்மீக சக்தியையும் வீணாக்குகிறோம்.

சக்தி விரயமாவதால் ஞாபக சக்தி விவேகம் பகுத்தறியும் தன்மை, நீதியாகச் செயற்படும் சக்தி என்பன குறையும். எனவே நாம் சக்தியை சரியான வழியில் பயன் படுத்தினால எமது சரீர' உள, ஆத்மீக சக்தியை வளர்க்கலாம் முன்பு குருகுலப் பயிற்சியில் யார் யாருக்கு எந்தக் கல்வியறிவு பொருந்துமோ அவர்களிற்கு அதை மட்டும் பயிற்சி கொடுத்தனர்.

எனவே நாமும் ஆசைக்கு வரம்பிடுதல் மூலம் சுவாமியின ஒழுக்க நெறியில் நடந்து எம்மில் உறங்கியிருசகும் ஆன்மீகத்தை மட்டுமல்லாது மற்றவர்களிலும் ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவோம்.

★

5ம் பக்கத் தொடர்ச்சி

பகவான் .........

ஒன்பதாவது ஆசைக்கு வரம்பிடுதல் இது பிறவிப் பெருங் கடலை கடப்பதற்கு ஒரு அரு மருந்து. வயது கூடக்கூட எமது ஆசைகள் அதிகரிக்கின்றன. நாம் ஆசைகளைக் குறைத்து பிறவிப் பெருங்கடலை அறுக்கவே இவ்வுலகிற்கு வந்தோம் ஆனால் தற்போது எதிர் மறையாக செயல் படுகிறோம்.

ஆசைகள் கூடக்கூட எமது பாவ மூட்டைகள் கூடுகின்றன. இதைக் குறைக்க சுவாமி கூறியுள்ள இலகுவான வழி முறை ஆசைக்கு வரம்பு வைத்தல் அப்படி யென்றால் ஆசைகளை முற்றாக துறந்து சாமியாரர்கப் போவது அல்ல. வரும் புதுப் புது ஆசைகளில் எது தேவையானது என்று ஆராய்ந்து தேவை அற்றதை விட வேண்டும். இதை வைராக்கியத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்படலாம்.

எமது ஆத்ம விடுதலைக்கு இது ஒரு இலகுவான வழி. எம்மால் மிக இலகுவாக கடைப்பிடிக்கக் கூடிய ஒரு சாதனை. அந்த ஆசைக்கும் ஒரு எல்லை நாம் வைக்க வேண்டும். நாம் தான் இந்த எல்லையை நிர்ணயிக்க வேண்டும். சுவாமி தீர்மானிக்க முடியாது எமது வாழ்வில் பல சங்கடங்கள் வர இடமுண்டு. அவ்வேளையில் இந்த ஒன்பது கோட்பாடுகளை நாம் சரியான முறையில் கடைப்பிடித்தால் நாம் எந்த பிரச்சனையையும் கஷ்டமின்றி தீர்க்கலாம்,

❋ ❋ ❋

10ம் பக்கத் தொடர்ச்சி

சத்தியமே .........

அவள் மிகவும் களைத்து மூச்செறிய அப்படியே அருகிருந்த கிணற்றுக்கட்டிலிருந்து 'ஓ' என்று அழுகிறாள் இது தானா வாழ்க்கை என்னால் வாழ முடியாது இப்படியே கிணற்றுக்குள் விழுந்து விட்டால் என்னவென்று யோசித்தாள் அப்படியே செய்யத் துணிந்தாள்.

அப்போது தான் அந்த இளம் காற்றில் மிதந்து வந்தது அந்த இன்னிசை. அந்த இன்னிசை இறைவனின் நாமத்தை அவள் காதருகே சொன்னது அவள் தன்னை மறந்தாள் இசை வந்த வழியே நடந்தாள் அது ஒரு பஜனை மண்டபம் அங்கு எல்லோரும் இறைவனின் புகழை பாடிக் கொண்டிருந்தனர். எல்லோருடனும் ஒருத்தியாய் நிரஞ்சலா தானும் அமர்ந்து கொண்டாள் இறைவனின் அந்தத் திருமுகத்தைக் கண்டாள் அவள் உள்ளம் நிறைந்தது. பஜனை முடிந்து எலலோரும் சென்றும் அவள் எழுந்திருக்க வில்லை.

அவள் கண்கள் மூடியிருந்தது அந்த மூடிய இமைகளிற்குள் சிந்தனைகள் இறைவனை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தன. நான் யார்? யாருக்காக பிறந்தேன்? என்னைப் படைத்தவனை மறந்தேனே படைத்தவன் காப்பான் என்ற நம்பிக்கையை இழந்தேனே? எவ்வளவு முட்டாள எவ்வளவு அறியாமை? அழிந்து போகும் உறவுகளை தேடினேனே என் இறைவனை மறந்து இனி என் கவலைகளை இழந்தேன் பிறக்கும் குழந்தையுடன் நான் இனி வாழுவேன் என் இறைவனுடன்.

தன் வாழ்வின் ஏமாற்றத்திற்குள் நித்தியமான சத்தியத்தை அறிந்து கொண்டாள் நிரஞ்சலா இப்போதே அவளிற்கு சந்தோஷ சிறகுகள் முளைத்தது. மெல்ல இமைகளைப் பிரித்து கண்களைத் திறந்தாள் அவள் இனிப்பார்க்கப் போவது சத்தியமான நித்திய உலகத்தை. அந்த உலகின் புதிய வாழ்வின் பயணத்தைத் தொடரப்போகும் இரண்டு ஜீவன்கள் தம் சத்திய பாதையில் காலடி வைக்கின்றன. சத்தியமே நித்தியமாய் அவர்களை வரவேற்கின்றது.

உலகியலின் நிலையற்ற செல்வங்களையும் உறவுகளையும் நம்பி ஏமாந்து அந்த ஏமாற்றத்துள் ஒரு உண்மையைக் கண்ட நிரஞ்சலாவே சத்தியவான்.

★ ★ ★

மனிதனின் கடமை சமூக சேவை செய்து மெய்ப்பொருளை உணர்தலாகும். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் 16

*சென்ற இதழ் தொடர்ச்சி*

### துறவிக்கு ஏன் ஆயுதம்

மூன்றாவது வன்முறை கடைப்பிடித்தல் நீங்கள் துறவி வேடங்கொண்டு காட்டிற்கு வந்து. ஆயுதங்கள் தரித்து உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யாத பிராணிகளைக் கொல்கிறீர்கள். இது எனக்கு சம்மதமில்லை அயோத்தியில் இருக்கும் போது ஆயுதத்தைத் தரித்தல் அவசியம் துறவியாக இருக்கும் போது ஆயுதங்களைப் பயன்படுதலாகாது

இவ்வாயுதங்களைக் கொண்டு அவைகளைக் கொல்ல அவை என்ன கெடுதல் செய்தன; ராட்சஸர்கள் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தனர்? அவை உங்களுக்கு ஒரு துன்பமும் தரவில்லை. அவைகள் உங்கள் வழியிலேயே வரவில்லை காரணமில்லாது அவற்றைத் துன்புறுத்துவது பெருந்தவறு

சீதை முன்பு எப்போதும் இவ்வாறு கூறியதில்லை, அடவேறு (புருஷசிம்மம்) என்று கூறப்படும் இலட்சிய மனிதனுக்கு உம்மிடமுள்ள இரண்டு குணங்கள் இருப்பது அவசியம். வன்முறையான மூன்றாவது குணம் இருக்கலாகாது நீங்கள் இலட்சிய புருஷர் நீங்கள் வன்முறையில் ஈடுபடலாகாது. இராமன் புன்முறுவலுடன் சீதைக்கு பதில் அளித்தார்.

'சீதா' நீ கூறியது உண்மையே. அரக்கர்கள் தவசீலர்களுக்கும் முனிவர்களுக்கும் சாதுக்களுக்கும் சொல்ல இயலாத கொடுமைகள் புரிகின்றனர். நான் முன் வராத போது, முனிவர்களே முன வந்து, 'இராமா எங்களுக்கு உதவி செய்'' என்று கோரினர் அந்த அரக்கர்களைக் கொன்று நாங்கள் யாகம் புரிய உதவி செய் என்று பிரார்த்தனை செய்தனர். நான் அவர்களுக்கு வாக்களித்தேன்.

சீதையைத் துறக்க நான் தயாராயிருக்கிறேன். 'இலட்சுமணணைத் துறக்க நான் சித்தமாயிருக்கிறேன. ஆனால் வாக்குறுதியை மீற என்னால் இயலாது. இது ாபவமோ புண்ணியமோ, யாகங்கள் புனிதமானவை'' யாகங்களுக்கு இடையூறு வராத வண்ணம் அவற்றிற்கு பாதுகாப்பளிப்பது என் கடமை தவசிகளையும், முனிவர்களையும், சாதுக்களையும் காப்பாற்றுவது எனது கடமை. நான் வாகுக்றுதி அளித்தேன் அதிலிருந்து தவற மாட்டேன்.

### உலக நலன்

சீதா, நீ இதை மறந்து விடு அது எனக்காக அல்ல தவ முனிவர்கள் உலக நலனுக்காகத்தான் தவம் செய்கிறார்கள் யாக, யக்ஞங்கள் உலக நலனுக்காக நடாத்தப்பட வேண்டும் உலக நலனுக்காகவே நானும் வனமுறையைக் கையாள வேண்டியுள்ளது. அது தவறில்லை

சீதை இராமனின் பாதங்களை பற்றிக்கொண்டு மன்னிப்பு கேட்டாள் நான் என் மனதில் தோன்றியதைச் கூறினேன். சீதா கூறிய நல்லறிவுரைகளைக் கேட்டு அவரானற நல்லவை என்று ஏற்றுக் கொண்டதால் அவளைத் துன்பத்தில் ஆழ்த்தவில்லை கற்புடைய மகளிர் அனைவருக்கும் தம் கணவன்மாருக்கு நல்ல அறிவுரை நவிலும் பொறுப்பு உண்டு கணவன் தவறான வழியில் செல்லும் போது அவனைத் திருத்துவதற்கு மனைவிச்கு அதிகாரம் உண்டு மனைவி கணவில் பாதி மனைவி இல்லாள் வீட்டின் பொறுப்பை அவளே சுமக்கிறாள்.

''இராமசந்திரா, உமக்கு நல்லது கூற எனக்கு அதிகாரம் உரிமை உண்டு நான் உன்னில் பாதி (அர்த்தாகிங்னி) இல்லாள், கிரஹலக்ஷ்மி (குடும்பப் பொறுப்பைச் சுமப்பவள்) தர்மபத்தினி (தர்மத்தை கூடவிருந்து காப்பாற்றுபவள்) உங்களிடம் என் கருத்தை கூற உரிமை இல்லையா? இப்போதும் என் மனதில் பட்டபடி நீர் செய்வது தவறேயாகும். நான் கூறுவதை ஏற்றுக் கொள்வதும், கொள்ளாததும் உங்கள் விருப்பம் சிங்கமும் புலியும் நம் வழிக்கு வரவில்லை. அவற்றின் வழியில் அவை நடக்கின்றன நீங்கள் ஏன் அவற்றைக் கொல்ல வேண்டும்,

ரிஷிகளும் முனிவர்களும், நீங்கள் வருவதற்கு முன்னரே இங்கிருக்கிறார்கள் நீங்கள் இங்கு வந்தால் உங்களைப் பிரார்த்திககிறார்கள் அந்தக் காரணத்துக்காக நீங்கள் அரக்கர்களை இம்சிக்கலாகாது அரக்கர்கள் உங்களுக்கு தீங்கு விளைவித்தால் நீங்கள் அதற்கு எதிராகச் செயல் புரியலாம்.

### தர்மஸ் தாபனம்

இராமன் இந்த அறிவுரைக்கு செவி சாய்க்கவில்லை இராமன் 'தர்மஸ்தாபனம்' தர்மத்தை நிலை நாட்ட வந்திருக்கிறேன். என் கண் முன்னால் யாராவது துன்பமடைந்தால் அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது புனித கர்மங்கள் புரியும் முனிவர்களை நான் கட்டாயம காப்பாற்றியே தீரவேண்டும். இறைவன தர்மத்தைக் காப்பாற்றினால் தர்மம் நாட்டைக் காப்பாற்றும் ''தர்மோ ரஷதி ரஷித'' தர்மத்தை நாம் கர்ப்பாற்றாவிடில் தர்மம் நம்மைக் கொன்று விடும். சீதா. இவற்றில் தலையிடாதே என்றார்,

சீதை மனம் கவின்றாள். எதற்காக தண்டகாரண்யம் வந்து சேர்ந்தோம் மூன்பு இருந்த வனங்களில் இருந்திருக்கலாகாதா? இன்னும் என்னென்ன சங்கடங்கள் காத்திருக்கின்றனவோ என்று தனக்குள் கவலையுற்றாள்.

வசந்த காலம் வந்தது யச்சைப்பசேல் என்ற புல்வெளி சில்லென்ற குளுமையான காற்று விலங்குகள் எல்லாம் அங்கங்கு தங்கி விட்டன அந்தச் சமயத்தில் அங்கு ஓர் பொன்மான் நடமாடியது

### பொன்மான்

சீதைக்கு தெரியும் பொன்மான் என்பது இயற்கையில் காணப்படுவதில்லை என்று அனைத்தையும் தியாகம் செய்த சீதைக்கு ஏன் இந்தப் பொன்மான் மேல் ஆசையா? அனைத்தையும் தியாகம் செய்ததால் அவளுக்கு இராமன் கிடைத்தார் பொன்மானுக்கு ஆசைப்பட்ட கணத்திலிருந்து இராமன் அவளிடம் இருந்து விலகி விட்டார். தியாகத்தினால் இராமன் கிடைத்தார். ஆசைப்பட்ட போது இராமன விலகி விட்டார்.

''இராமா எனக்கு அந்தப் பொன்மான் வேண்டுப்'' இதுவரை சீதை ஒன்றையும் விரும்பிக் கேட்டதில்லை ஆகவே இராமன் அவளது விருப்பத்தை நிறைவேற்ற துணிந்தார். இலட்சுமணன் கூறினார் ''இது மாயமாகத் தோன்றுகிறது நீங்கள் பர்ணசாலையை விட்டு விலகிச் செல்லலாகாது. வேண்டுமானால் நான் சென்று அதைக் கொண்டு வருகிறேன்'' இராமனுக்கு இது தெரியாதா? ஆயினும் நடக்க வேண்டியது நடந்தே தீரும். இதன முடிவில் இராவணன கொல்லப்படுவான் இதுவே தலையான திட்டம்.

பொன்மான் என்பது இல்லை என்று தெரிந்தும் இராமன் பிடிவாதம் காட்டி அதனைந் தொடர்ந்தார். அம்பு தொடுத்து அதன் மேல் செலுத்தினார் பொன்மான் மறைந்து மாரீசன் தன்சுய உருவில் காட்சியளித்தார் முன்பே மாரீசனுக்கு பல அனுபவங்கள ஏற்பட்டிருந்தன. இராமனுடைய ஆற்றல் மாரீசனுக்குத் தெரியும் அவன் சாகும் போது ஹா சீதா ஹா லட்சுமணா என்று கூறி இறந்தான்.

### நாடகம்

சீதா இதனைக் கேட்டாள் அது இராமன் குரல் போல இருந்தது லட்சுமணா இராமன் அபாயகரமான நிலையில் இருக்கிறார் உடனே செல் என்று கூவினாள். இலட்சுமணன் கேட்கவில்லை இது இராமனின் குரலல்ல இது மாய ராட்சஸனின் குரல் இராமனுக்கு அபாயமில்லை. இராமன் ஸ்ரீ மந்நாராயணனே ஆவார், கவலைப்பட வேண்டாம் என்று சீதையிடம் மன்றாடினான்.

நடக்கவிருக்கும் நாடகத்துக்கு அவளும் ஒரு கருவி இலட்சுமணன் எவ்வாறாவது அனுப்பப்பட வேண்டும் நலல வார்த்தைகள் கூறிய போது சட்சுமணம் லட்சியம் செய்யவில்லை, கடினமான சொற்களை பயன்படுத்த தீர்மானித்தாள் இக்காட்டில் நீயும், நானும், இராமனும் மட்டுமே இருக்கிறோம் இராமன் காலமான பின் என்னை அடைய வேண்டும என்பது உன் எண்ணமா? என்று கேட்டாவ.

தொடரும்

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சதய சாயி சேவா நிலையத்தினரால் கே கே. எஸ் வீதி, பூநாறிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடப்பெற்று 16 - 07 1999 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சேவாதளத் தொண்டர் பயிற்சி முகாம் - அறிமுகம்

வட பிராந்திய ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சேவாதள. தொண்டர் பயிற்சி முகாம கடந்த மாதம் 12, 13ம் திகதிகளில் திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுககு தலைமை தாங்கிய டாக்டர். எஸ். கருணாநந்தன் (சேவாதள இணைப்பாளர்) ''சேவாதள பயிற்சி முகாம் - அறிமுகம்'' உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

தொகுப்பு: R. இந்திரா

சேவா தளப்பயிற்சி முகாம் வருடம் தோறும் நடத்தப்படுகிறது சுவாமியின் பெருங் கருணையால் இந்த வருடத்திற்குரிய பயிற்சி முகாமை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சாயி நிறுவனம் சிறந்த சேவாதளத் தொண்டரை தலைவராகக் கொண்டிருந்தால் நிலையம் சிறப்புற நடைபெறும் இப்பயிற்சி முகாமில் நேரத்தைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

எப்படி ஆசிரியர்களுக்கு தாதிமார்களுக்கு பயிற்சி கொடுத்தல் இன்றியமையாததோ அதே போல சேவாதளத் தொண்டர்களுக்கும் பயிற்சி முக்கியமானது ஏனெனில் சுவாமியின் சேவைகள் சரியாக சிறப்பாக நடைபெற வேடுண்ம். தொண்டர்கள் சேவையில் ஆர்வத்துடன் உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும். அபிபபிராய பேதங்களிற்கு இடமளிக்கக் கூடாது. சேவைக்கென்று பணம் வசூலிக்கக் கூடாது. சுவாமியிடம முழுநமபிக்கை கொண்டு சேவையை முன்னின்று செய்தல் வேண்டும்.

இங்கு நூற்றினாப்பது பேருக்கு மேல் பயிற்சி பெறுவதற்காக வந்திருக்கிறார்கள் பயிற்சியாளர்கள ஒவ்வொருவரும் தங்கள் நிலையங்களிற்குச் சென்று சேவை செய்யும போது நிலையங்கள நல்ல முறையில் செயற்படும் இந்நோக்கத்தை வைத்தே இப்பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது இதற்கு சுவாமியின் அருளையும் ஆசியையும வேண்டுகிறோம்.

# சேவாதளத்தின் தொண்டர் யார்?

## சேவாதளத்தின் முக்கிய கடமைகளும் பொறுப்புக்களும்

பகவான் உலக மக்களுடைய இன்னல்களைத் தீர்க்க, தெய்வீகமாக்க சாயி நிலையங்களை உருவாக்கித் தந்துள்ளார் இந்த நிறுவனத்தை இயக்குபவர்கள் தான் சேவாதள தீவிர பணியாளர்கள் சேவாதளத் தீவிரபணியாளர்கள் இல்லாத நிலயம் ஒன்றும் இல்லை மிகவும் முக்கியம் ஆனவர்கள். அடித்தளமானவர்கள் சேவாதளத் தொண்டர்கள் தான்.

### தொண்டர்கள் யார்?

சேவாதளத் தொண்டர்கள் யார் என்பதற்கு ஒரு சிறுகதை.

ஒரு மிகவும் ஏழைப்பிள்ளை உதவியில்லாத பிள்ளை யாருமே இல்லை அநாதையாக ஒரு இடத்திலே நின்றது. ஒரு அம்மையார் அவ்வழியாக வந்தார். மனம் நொந்தார் உடுக்க உடுப்பில்லை தலையெல்லாம் அலங்கோலமாக இருந்தது வயிறெல்லாம் ஒட்டிப்போய் இருந்தது மிகவும கவலையான நிலையில் இருந்தது அந்தப் பிள்ளை.

அந்த அம்மையார் உடனடியாக பிள்ளைக்கு உடுப்புக் கொடுத்து தலையைவாரி விட்டு உணவு கொடுத்து கொஞ்சி விட்டார். அப்பொழுது அப்பிள்ளை அந்தப் பெண்ணை பார்த்து கேட்டது

''நீங்கள் கடவுளா ....?'' அவர் சொன்னார் இல்லையென்று. பின் அந்தப்பிள்ளை கேட்டது.

''நீங்கள் கடவுளுடைய சொந்தக்காரரா? என்று கேட்டது அவர் ஆம் என்று சொன்னார். அந்தப்பிள்ளை சொன்னது நானும் அப்படித் தான் நினைத்தேன் நீங்கள் கடவுளுடைய சொந்தக்காரராகத் தான் இருக்கும் என்று நினைத்தேன்என்றது.

இவர்கள் தான் தீவிரபணியாளர்கள் நீங்கள் உண்மையிலேயே கடவுளுடைய சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும். அல்லது கடவுளாக இருக்க வேண்டும்.

### சுவாமியிடம் பூரண நம்பிக்கை வேண்டும்

ஸ்வாமியை கடவுளாக ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே இந்த நிலையத்தில் இருக்க வேண்டும். அவரைப் பற்றி அறியும் வரை வெளியில் இருந்து அறிந்து விட்டு பின் உள்ளே வர வேண்டும்.

பகவான் ஆயிரம் ஆயிரம் லீலைகளை மகிமைகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

அண்மையில் நடந்த ஒரு லீலை 1998ம் ஆண்டு நவம்பர் உலக சத்திய சாயி நிறுவனங்களின் தலைவர்கள் மகாநாடு புட்டபர்த்தியில் நடந்தது நியூசிலாந்தில் இருந்து சிலர் வந்தனர். அதில் ஒருவர் 'பைலட்' ஐத் தெரிந்தபடியால் பைலட் அறையிலேயே இருக்க விரும்பி அங்கேயே இருந்தார், பிளேன் வருகிறது பெங்களூர் அருகில் வந்தவுடன் திடீரென சிவப்பு விளக்குகள் எல்லாம் அணைந்தது.

பைலட் சொன்னார் ''பிளேன்'' பெங்களூரில் இறங்க முடியாது; காரணம், விமானத்தில் கோளாறு என்று சொன்னார்.

''என்னப்பா நீ சொல்கிற கதை. நாங்கள் புட்டபர்த்திக்கு உலகத் தலைவர் மகா நாட்டிற்குப் போகிறோம்' கடவுளிடம் போகிறோம். நேரத்துக்கு போய் சேர்வதற்கு ஏதாவது வழி பாா என்று கூறினார்.

'பைலட்' அவரை நன்றாகப் பார்த்தார். பின் கேட்டார் உங்கள் பாபா என்ன கடவுளோ?

ஆம் என்று பைலட் சொன்னார் பாபா கடவுள் என்றால் பிளேன் ஓடும்படி சரி செய்யட்டும் பார்க்கலாம் என்றார்.

> வடபிராந்திய ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சேவாதளத் தொண்டர் பயிற்சி முகாமில் ஸ்ரீ. வே. சேனாதிராசா (தலைவர் வடபிராந்திய சத்ய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழு) ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.
>
> தொகுப்பு: கே. சித்திராவதி

உடனே சிவப்பு விளக்குகள் எல்லாம் எரிந்தது பிளேன் சரியானது எல்லோரும் பெங்களூரில் இறங்கினார்கள். அவர்கள் ஆனந்தமாகப் போவதை பைலட் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

### இறைவனை எப்படி நேசிப்பது

உலகத்தை காப்பவர் பரப்பிரம்மம் தான் அவருடைய அருமையான பணியிலே நாங்கள் ஈடுபட வேண்டும், எப்படி ஈடுபட வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்தப் பயிற்சி முகாமை வைக்கிறோம்.

iv ப் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் முக்கிய போதனைகள்

### கடவுள் புட்டபர்த்தியில்

பகவானுடைய முக்கிய போதனைகளில் முதலாவது, பகவான் யார்? என்ற ஒரு கேள்வி கடவுள் இருக்கிறாரா? என்ற ஒந கேள்வி சர்வ சாதாரணமாக எல்லோர் மனதிலும் எழும இக் கேள்விக்கு பகவானே பதில் சொல்கிறார்.

''யாராவது உன்னைப் பார்த்து கடவுள் இருக்கிறாரா, எங்கு கண்டாய்? என்று கேட்டால் கடவுளைக் கண்டேன். அவரை நான் புட்டபர்த்தியில் கண்டேன். என்று சொல்லுங்கள் அந்த வேதங்களில் சான்று, இந்த வேதங்களில் சான்று என்று எல்லாம் தேடித்திரியாமல் ஒரே மறு மொழியாக கடவுளைப் புட்டபர்த்தியில் கண்டேன் எனத்திட்டவட்டமாகச் சொல்லுங்கள்'' என்றார். இந்த அடிப்படையில் நம் பிக்கை இருக்க வேண்டும்.

ஸ்வாமியைப் பற்றி ஆரம்பத்தில் எனக்கும் ஒரு சந்தேகம் இருந்தது. அதாவது புட்டபர்த்தியில உள்ள பிள்ளையார் பிரதிஷ்டை செய்யும் போது நான் அங்கு இருக்கிறேன். எல்லா ஆயத்தமும் முடிந்து கடைசியாக குருக்கள் தீபம் காட்டும் கட்டம் வந்து விட்டது.

திரு. கஸ்தூரி பகவானை அவர் அறையில் இருந்து அழைத்துக் கொண்டு வருகிறார் நான் மிகவும் அண்மையில் இருந்து அவதானித்துக் கொண்டு இருக்கிறேன்; பாபா வருகிறார் என்ன செய்யப்போகிறார்.? அவர் தான் தீபம் காட்டப் போகிறாரோ என்று எண்ணியபடி உற்று நோக்கிக் கொண்டு இருந்தேன். ஸவாமி வந்தார். பிள்ளையாருடைய பீடத்தில் ஏறினார் பிள்ளையாருக்குப் பக்கத்தில் நின்று கொண்டு குருக்களுக்குச் சொன்னார். தீபம் காட்டும்படி. குருக்கள் தீபத்தை இவருக்கும் சேர்த்துக் காட்டினார்.

இது நடந்தது 1967ம் ஆண்டு ''நானும் பிள்ளையாரும் ஒன்று'' என்பது அன்று நான் படித்த முதல் பாடம். பகவான் வேறு கடவுள் வேறு அல்ல. இதே போல பத்திரிகையில் நீங்கள் படித்திருப்பீர்கள் திருப்பதி ஆலயத்தின் மூலஸ்தானத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் பகவானாக காட்சி அளித்த செய்தி.

### இந்த உடம்பு தரப்பட்ட நோக்கம்

புட்டபர்த்தியில் சுவாமியின் சுப்பர் ஸபெசாலிட்டி (Super Speciality Hospital) ஆஸ்பத்திரியின் முகப்பிலே உள்ள அழகான பிள்ளையார் விக்கிரகத்திற்கு அடியில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருக்கிறது.

''இந்த உடம்பு உனக்குத் தரப்பட்டுள்ளது. மக்களுக்கு சேவை செய்யவே'' – பாபா –

தாங்கள் வைத்திய சேவை செய்வது போல வடஇந்தியாவில் ஞானேஸ்வரன் என்ற ஒரு ஞானி காலையில் நோயாளிகளிடம் சென்று வைத்திய சேவை செய்வது வழக்கம் அந்த ஊரிலுள்ள தன வந்தர் ஒருவர் ஞானியின் வீடு தேடிச்சென்றார். அவர் அங்கு இருக்கவில்லை எனவே அவர் சேவை செய்யும் 'இடத்திற்குச் சென்றார்.

ஞானி அங்கு ஒரு நோயாளியின் புண்ணுக்கு மருந்து கட்டிக் கொண்டு இருந்தார். தனவந்தர் தான் பணக்காரன் என்ற படியால் தன்னிடம் வருவார் என எதிர்பார்த்தார். ஆனால் ஞானி அவரைப் பார்த்து,

முன் வீட்டில் ஒரு அம்மா இருக்கிறார் அவருக்கு எத்தனை வயது என்று கேட்டு வரும்படி சொன்னார் பணக்காரர் அந்த அம்மாவிடம் சென்று வயதைக் கேட்ட பொழுது அதற்கு அந்த அம்மா,

''எனக்கு ஆறுவயது'' என்று கூறினார். தனவந்தர் ஞானியிடம் வந்து அந்த அம்மா தனக்கு ஆறுவயது என்று கூறினார் எனக்குப் பைத்தியமோ அந்த அம்மாவுக்கு பைத்தியமோ தெரியவில்லை என்று கூறினார்.

அந்த அம்மாவின் கணவனுக்கு எத்தனை வயது என்று கேட்டு வரும்படி ஞானி திரும்பவும் அந்த தனவந்தரை அம்மாவிடம் அனுப்புகிறார் அவர் சென்று உங்கள் கணவனின் வயது என்ன என்று கேட்ட பொழுது அந்த அம்மா

ஒரு வயது என்று கூறினார். இவருக்குப் பைத்தியம் கூடியிருககிறதே என்று எண்ணியபடி ஞானியிடம் வந்து ஸ்வாமி எல்லாம் பைத்தியக்கார மறுமொழி சொல்கிறாரே ஒன்றும் விளங்கவில்லையென்று சொன்னார்.

> வட்பிராந்திய ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சேவாதள தொண்டர் பயிற்சி முகாமில் ஸ்ரீ செ. சிவஞானம் (மத்திய இணைப்பாளர்) ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.
>
> தொகுப்பு: கே உஷா

விளங்காவிட்டால் அந்த அம்மாவிடம் சென்று விளக்கம் கேட்கும்படி ஞானி சொன்னார். தனவந்தர் அம்மாவிடம் விளக்கம் கேட்ட பொழுது அம்மா சொன்னார்

ஆறு வருடங்களுக்கு முன் தான் நான் மனித சேவையில் ஈடுபட்டேன் எனவே எனக்கு ஆறு வயது, எனது கணவன் சேவை செய்யத் தொடங்கி ஒருவருடம் தான் ஆகிறது. அவருக்கு ஒரு வயது அதன் பின்பு தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று விளக்கம் கொடுத்தார்

### ஆத்மீக யாத்திரை

நாங்கள் ஒரு ஆத்மீக யாத்திரை தொடங்கி இருக்கிறோம். யாத்திரை போகும் முன்பு எந்த இடத்திற்கு யாத்திரை போகிறோம் எங்கே முடியப்போகிறது என்பதை அறிந்திருக்க வேண்டும். நாங்கள் இந்த யாத்திரையை வெற்றிகரமாக முடித்து விட்டோம் என்று கற்பனை செய்கிறோம் ஆனால் நன்கு விசாரணை செய்தால் இந்த யாத்திரை எங்கிருந்து ஆரம்பித்தது எங்கே முடியப்போகிறது என்று நினைத்துப் பார்த்தால் அது நம்முள் ஆரம்பித்து நம்முள் முடிவுற்றிருப்பதைக் காணலாம்.

எத்தனை கோவில்களுக்கு சென்றால் என்ன எத்தனை யாத்திரை செய்தால் என்ன எத்தனை சங்காபிஷேகம் செய்தால் என்ன ஆத்மீக யாத்திரை முடிவுறுவது எம்முள் தான் என்ற பெரிய உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

யோகசுவாமி காசிக்குச் சென்று இறைவனைத் தரிசித்து விட்டு ''தேடித்திரிந்து கணடேன். காசி விஸ்வநாதனை என்னுள்'' என்று அங்கிருந்து கடிதம் எழுதினார்.

நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு பெயரை வைத்திருக்கிறோம் பலவிதமான வாழ்க்கை நிலையில் பலவிதமான அந்தஸ்த்தில் இருக்கிறோம செல்வந்தர்களாக, ஏழைகளாக பல வேறு நாட்டைச் சேர்ந்தவர்களாக பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். இந்த யாத்திரையின் முடிவில் ஒரு 'பெரிய உண்மையை விளங்கிக் கொள்வோம் விளங்க வேண்டும் என்ன தத்துவம்?

எனக்கு சாதியில்லை, மதமில்லை, தேசமில்லை, பாஷையில்லை ஏன் கடவுள் இல்லை ஒன்றுமில்லாத நிலை இந்த நிலை தான் ஆத்மீக யாத்திரையின கடைசி நிலை Attribute -Less) இந்த உண்மையை விளக்கிக் கொள்ள வேண்டும்.

### எதுவும் நிலையானதல்ல

உலகில் எதுவும் நிலையானதல்ல இறைவனைத்தவிர தர்மராஜா கிருஷ்ணபரமாத்மாவுக்கு எவ்வளவு கிட்டி இருந்து பழகினாலும் மனதில் ஒரு சஞ்சலம் ஏற்படுகிறது

ஒருநாள் தர்மராஜா தங்கள் சஞ்சலங்களை நீக்கி உதவி புரியவருமாறு கிருஷ்ணபரமாத்மாவிடம் பிரார்த்தனை செய்கிறார். கிருஷ்ணர் சில காலம் தங்கியிருந்து பின் ஒரு துண்டைக் கொடுத்து ''சஞ்சலம் வரும் போது இந்தத் துண்டை வாசி'' என்று போகும் போது கொடுத்து விட்டுப் போனார் பாண்டவர்களின் கடைசி காலத்தில் இமாலய மலைசாரல் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்போது அதை எடுத்துப் படிக்கிறார் அதில் ''உன் உடம்பு உன் சஞ்சலங்கள் நிலையானதல்ல'' என்று எழுதப்பட்டு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், எங்களுடைய வாழ்க்கையில் எங்களை ஏதோ சிறைப்படுத்துவதாக நாங்கள் கற்பனை பண்ணிக் கொள்கிறோம். தாளையன் பாபா என்ற முஸ்லீம் ஞானி இருந்தார். கொழும்பில் இரத்மலானையில் அவருக்கு ஒரு சமாதி கூட இருக்கிறது அந்த ஞானி மனத்தின் மர்மம் பற்றி விளக்கம் கொடுத்திருக்கிறார்.

ஒருவர் மோட்சத்துக்குப் போகிறார். அங்கு ஒரு பெரிய கதவு இருப்பதாகக் காண்கிறார். ஏதோ முயன்று அந்தக் கதவையும் கடந்து போய் திரும்பிப் பார்க்கிறார்: இப்போது அங்கே அவர் கண்ட அந்தப் பெரிய தடைக் கதவு தெரியவில்லை இந்தக் கதவு என்ற மறியல் சிறை எங்கள் மனதில் எழுந்த தோற்றம்.

## ஸோகம் மந்திரம்

மனதின் இத்தகைய குளப்பத்திற்கு பரிகாரமாக சுவாமி ஒரு இலகுவான மந்திரத்தை சொல்லித் தந்திருக்கிறார். ''ஸோகம்'' என்ற மந்திரம் ஸோ - அவன், அகம் - நான் அதாவது அவனே நான். நானே, அவன். இந்த மந்திரம நாம் சுவாசிக்கும் பொழுது தானாகவே சொல்லிக் கொண்டு இருக்கிறது.

யோக சுவாமியின் நற்சிந்தனையில், ''நீ உடம்பன்று, மனமன்று. புத்தியன்று சித்தமன்று. நீ ஆத்மா, ஆத்மா ஒருநாளும் அழியாது இது மகான்களுடைய அனுபவசித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியில் பிசகாதே எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர். இப்படிக்கு அவனே நான்' (ஸோ-அகம்)

இந்த ஸோகம் மந்திரத்தை யோக சுவாமி இப்படி விளக்கியிருக்கிறார்.

## தெய்வப்பிரீதி பாவப்பீதி, சமூகநீதி

தெய்வப்பிரீதி, இறைவனிடத்தில் அசையாத நம்பிக்கை வேண்டும். பாவப்பீதி- பாவம் செய்வதற்கு பயப்பட வேண்டும் சமூகத்திலே நீதியைக் கடைப்பிடிக்க வேண்டும். நீதியைச் செலுத்த வேண்டும்.

## ஒன்பது வித வழிபாட்டு முறைகள்

ஒன்பது விதமான வழிபாட்டு முறைகள் உண்டு சிரவணம், கீர்த்தனம், விஷ்ணுஸ்மரணம் பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம் சினேகம், ( சக்யம் ) ஆத்ம நிவேதனம் என்பவையே அவை. இதில் ஏதாவது ஒன்றைக் கடைப்பிடித்தாலே போது மனாது ஆகும்.

## உணவு

நாம் உணவில் கவனமாக இருக்க வேண்டும். எங்களுடைய உணவு எங்களுடைய சிந்தனையைத் தாக்குகிறது. உணவு சுத்தமாக சாத்வீகமாக இருக்க வேண்டும் உணவு என்று சொல்லும் போது வாயினால் உண்ணும் உணவு மட்டு மல்ல, கண்ணால் பார்க்கிறது. காதால் கேட்கிறது. இப்படி எல்லா வகைப்பட்ட உணவும் சாத்வீகமானதாக இருக்க வேண்டும்' நல்லதைப் பார்த்தால், நல்லதைக் கேட்டால் நல்லதைச் சிந்தித்தல் இவையெல்லாம் உணவோடு சம்பந்தப் பட்டவை.

எண்பத்து நான்கு லட்சம் விதமான ஜீவராசிகள் இந்த உலகில் உண்டு. இவற்றில் மனிதனைத் தவிர மற்றும் பறவை, மிருகங்கள், பூச்சி புழு என இவையெல்லாம் கடவுள் படைத்தவைகளை உண்டு நிம்மதியாக சந்தோஷமாக வாழ்கின்றன. மனுஷன் தான் இயற்கைக்கு விரோதமாக தான் விரும்பியபடி சாப்பிடக் கூடாத உணவுகளை, சாப்பிடக்கூடாத முறையிலே தாழித்து பொரித்து எல்லாம் சாப்பிடுகிறான். இதனால் மனதையும் உடம்பையும் பழுதாக்குகிறார்கள்.

## இதயத்தில் ஒருவருக்கே இடம்

இதயம் என்பது ஒரே கதிரை. அந்தக் கதிரையில் ஒருவருக்குத்தான் இடமுண்டு. கொஞ்சக் காலத்திற்கு ஒருவர் இருப்பார். பின் அவரை மாற்றிவிட்டு இன்னொரு கொஞ்சக் காலத்திற்கு வேறொருவர் இருப்பார். அப்படிச் செய்யாது. ஒருவருக்கே அந்தக் கதிரையைக் கொடுக்க வேண்டும். பகவானை அந்தக் கதிரையில் இருத்தி விட்டால் பிறகு வேறு ஒருவருக்கும் இடம்இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்

## நல்லவராவதற்கு வழி

எங்களுடைய பழைய காரியங்களைப் பற்றி நாங்கள் அடிக்கடி கவலை கொள்வதுண்டு போனது சரித்திரம். வரப்போவது ஒருவருக்கும் தெரியாது. நிகழ்காலத்தில் இருந்து காரியங்களைப்பார். இதனுடைய தத்துவம் என்னவென்றால் நல்லவர்களாக இருங்கள்.

நல்வர்களாக இருப்பதற்கு பகவான் ஐந்து வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறார். அதாவது நல்லதைப் பார்க்க வேண்டும். நல்லதைக் கேட்க வேண்டும், நல்லதைப் பேச வேண்டும். நல்லதைச் சிந்திக்க வேண்டும், நல்லதையே செய்ய வேண்டும்.

## சாதனை செய்ய வேண்டும்

பல விதமான புத்தகங்களைப் படிக்கலாம் பலவிதமான ஆத்மீகப் பிரசங்கங்களைக் கேட்கலாம். ஆனால் எவ்வளவு தான் அறிவை வளர்த்துக் கொண்டாலும் சாதனையில் ஈடுபடாமல் விட்டால் அதில் எந்த விதமான பிரயோசனமும் இல்லை,

ஐந்து மந்திரங்களை பகவான் எமக்குச் சொல்லியிருக்கிறார். அதவாது நான் கடவுள் நான் அகண்ட பரப்ரம்மம் நான் சச்சிதானந்தம் சஞ்சலங்கள் என்னைத் தாக்காது எப்போதும் திருப்தி உள்ளவனாக இருப்பேன் இந்த ஐந்து மந்திரங்களையும் எப்போதும் நாம் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

## சேவை பற்றி

சேவைபற்றி சுவாமி சொல்லும் தத்துவம் இது வெகுமதி பெறுவதற்காகவோ, அல்லது கைமாறு கிடைப்பதற்காகவோ அல்லது மற்றவர் கவனத்தை ஈப்பதற்காகவோ, உனது கெட்டித்தனம், பணம் அதிகாரம், அந்தஸ்து இவைகளால் ஏற்பட்ட பெருமையின் காரணமாகவோ சேவை செய்ய வேண்டாம் அன்பினால் உந்தப்பட்டு சேவை செய். உனக்கு வெற்றி கிடைத்தால் அந்த வெற்றியை இறைவனின் அனுக்கிரகத்திற்கு அர்ப்பணித்துவிடு இறைவனே உன்னுள் அன்பாக இருந்து சேவை செய்யத் தூண்டுகிறான்.

நாம் செய்யும் ஒவ்வொரு சேவையும் எமது விடுதலைக்கு ஒவ்வொரு அடி எடுத்து வைத்ததாக முடியும்.

மேலும் உனக்கு நன்மை செய்பவனுக்கு செய்யும் சேவையை விட துன்பம் செய்பவனுக்கு செய்யும் சேவை விசேஷம் ஆனால் இந்தக் காலத்தில் துன்பம் செய்பவனுக்கு சேவை செய்யும் போது அவதானமாக இருக்க வேண்டும். ஆபத்து வரலாம் அதற்கு ஒரு சின்னக் கதை சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஒரு மன நோயாளி சாப்பாட்டு அறையில் இருந்து கொண்டு அவசரமாகக் கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

கடவுள் அறிவது, பணக்கஸ்டமாக இருக்கிறது தயவு செய்து எனக்கொரு பத்து ரூபாய் அனுப்பி விடுங்கள்

ஆஸ்பத்திரி டொக்டர் அந்த வழியே போகிறார் அதைப்படித்துப் பார்ககறார். நான் இந்தக் கடிதத்தை கடவுளுக்கு அனுப்பி விடட்டுமா? என்று கேட்கிறார்.

'ஓம் ஐயா அனுப்பி விடுங்கள்' என்றார் நோயாளி வைத்தியர் இரண்டு நாட்கள் கழித்து நோயாளியிடம்,

'இதோ கடவுள் உனக்கு மறுமொழி அனுப்பி உள்ளார்' என்று ஐந்து ரூபாய் நோட்டை உறையில் இட்டுக் கொடுத்தார்.

அடுத்த நாள் மீண்டும் அந்த நோயாளி கடிதம் எழுதுவதை அவதானித்த வைத்தியர் கடிதத்தைப் படித்துப் பார்த்தார்.

கடவுள் அறிவது நீங்கள் அனுப்பிய பணம் கிடைத்தது நன்றி ஆனால் வைத்தியர் ஐந்து ரூபாவை விளையாடி விட்டார் என்று எழுதி இருந்தது. அதாவது தரம் அறிந்து சேவை செய்ய வேண்டும்.

மனிதனின் முக்கிய கடமை ஆண்டவனின் கருணை நிரம்பிய பிரேமையை தானும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துவதேயாகும். புனித மனிதப்பிறவி எடுத்ததின் நோக்கம் சுயநலம் காக்கவும், சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவுமல்ல. சமுக சேவை செய்வதற்கே இப்பிறவி அளிக்கப்பட்டுள்ளது சுயநலமற்ற சமுக சேவை செய்வதே மனிதனுக்கு ஆத்ம திருப்தியை அளிப்பதுடன் பிறவிப் பெரும் பயனான மெய்பொருளுணர்தலையும் பெறச்செய்யும்.

— பாபா —

உங்கள் இதயத்தை இறைவனின் இருப்பிடமாக மாற்றுங்கள். -பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Iம் பக்கத் தொடர்ச்சி

## சேவாதளத்தின்.........

கடவுளை நாங்கள் நேசிக்க வேண்டும். கடவுளை நாங்கள் எப்படி நேசிக்கிறது? கடவுள் எல்லா ஜீவராசிகளிடத்திலும் இருக்கிறார் பிரதானமாக மனிதனுடைய இதயத்திலே இருக்கிறார் அப்படி இருக்கும் கடவுளை நாங்கள் நேசிப்பது எப்படி என்றால் இன்னல் படும் மனிதர்களுக்கு உதவ வேண்டும் உணவில்லாது தவிக்கும் மனிதர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் உடையில்லாதவர்களுக்கு உடை கொடுக்க வேண்டும் மனக்கிலேசத்துடன் இருப்பவர்களுக்கு மன ஆறுதலைக் கொடுக்க வேண்டும் அப்படி கொடுப பதினாலே கடவுளை நாங்கள் நேசிககிறோம். இப்படிக் கடவுளை நேசிக்கின்ற நிலையில் உள்ளவர்கள் தான் சேவாதளத் தொண்டர்களாக இருக்க முடியும்.

உண்மையிலேயே எங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவோ இன்னல்கள் ஆபத்துக்கள் எல்லாம் வந்த பொழுது இறைவன் கைகொடுத்து எங்களை எங்கள் பிள்ளைகளை காப்பாற்றி இருக்கிறார். நோய் துன்பம் வராமல் காப்பாற்றி இருக்கிறார் ஏன் சுவாமியினுடைய தன்மையே தெய்வீகமானது நீங்கள் பகவானுடைய பிள்ளைகளாக இருக்கும் பொழுது தெய்வீகத்தை உங்களிடம் மிளிரச் செய்து இந்த தெய்வீக சேவையை நீங்கள் செய்வீர்களானால இந்த சேவைக்கு பத்து மடங்காக நான் உங்களுக்கு செய்வேன் என்று பகவான் சொல்லி இருக்கிறார் ஆகவே சேவாதளத் தொண்டர்கள் தீவிர பணியாளர்கள் எப்படி எங்களுடைய சேவையைச் செய்ய வேண்டும் என்பதை அறிந்திருப்பது மிகவும் அவசியம்.

## தொண்டர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்

16 — 50 வயதுவரை உள்ளவர்கள் தொண்டர்களாக இருக்கலாம். நாள் ஒன்றுக்கு குறைந்தது 2 மணித்தியால சுய சேவை. கிழமையில் 4 மணித்தியாலம் சமுதாய சேவை செய்ய வேண்டும். பிரதானமாக இவை எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணமாகவே செய்ய வேண்டும். இரண்டு மணித்தியாலம் சேவை செய்பவர்கள் பணியாளர்கள், 4 மணித்தியாலம் சேவை செய்பவர்கள் தீவிர பணியாளர்கள் எதுவுமே செய்யாமல் பஜனைக்கு தவறாமல் வருபவர்கள் சாதாரண தொண்டர்கள்.

மேலும் சுவாமி பிரதானமாகச் சொல்லி இருக்கிறார்; மாமிசம் புசித்தலை தவிர்க்க வேண்டும். மது அருந்துதலை தவிர்கக வேண்டும் புகைபிடித்தலை தவிர்க்க வேண்டும். இது பிரதான பணி.

உலகத்தில் ஏராளம் கோதுமை இருக்கின்றது. ஏராளம் அரிசி, ஏராளம் பழவகைகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் மனிதன் இந்த மாமிசங்களை எல்லாம் உண்டு தன்னைக் கெடுத்துக் கொள்கிறான் என்று சுவாமி சொல்லி இருக்கிறார்.

சுவாமி இனனொரு கருத்தும் சொல்கிறார். உலகத்தில் நிறைய மனிதர்கள் எல்லாம் இருக்கிறார்கள் ஏன்? உலகத்தில் உள்ள மீன் எலலாவற்றையும் சாப்பிட்டு விட்டீர்கள். அவை எல்லாம் மனிதர்களாகப் பிறந்து விட்டன அதனால் தான் மனிதர்களைக் காண்பது அரிதாக இருக்கிறது. எனவே சாயி பணியாளர்கள் உணவிலே மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் பிரதானமாக மாமிச உணவைத தவிர்க்க வேண்டும்.

## திரிகரண சுத்தி வேண்டும்

அடுத்ததாக திரிகரண சுத்தி எங்களுக்கு இருக்க வேண்டும். சிந்தனை, சொல். செயல சுததமாக இருக்க வேணடும். பகவான் எஙகளுடைய உள்ளததுல இருநது கொணடு இந்த மூனறையும் அவதானித்துக் கொண்டு இருககிறார். என்ற சிநதனை எஙகளுககு இருக்க வேணடும. இப்படியான நல்ல சிந்தனைகள் வர வேணடுமெனறால அதை உணடாக்குவது ஜபம தியானம ஒனபது ஒழுக்கக் கோட்பாட்டில் ஜபம் தியானம் முதலாவதாக வருகிறது. இந்த ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகளையும் பணியாளர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஜப தியானம் செய்யாதவர்களை தீவிர பணியாளர்கள் என்று சொல்ல முடியாது சாயி அடியவர்கள் என்று சொல்ல முடியாது.

உங்களில் எங்களுக்கு பெரிய நம்பிக்கை உண்டு. பகவானுடைய புனிதப் பணியை உங்கள் கைகளில் தரப்போகிறார்கள். நீங்கள்தான் சாயி நிலையங்களில் தலைவர்களாகவும்' காரியதரசிகளாகவும் மிகவும் முக்கியமான பணிகளைச் செய்யப் போகிறீர்கள். ஆகவே அதற்கு உங்களைத் தகையாக்கிக் கொள்ளுங்கள். முதலாவது ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகளையும் கடைப்பிடித்தல் அது போல மேலே சொல்லப் பட்டது போல உணவிலும் கவனமாக இருக்க வேண்டும்.

## நேரம் காலம் தவறக்கூடாது

நேரம் மிகவும் பிரதானமானது. நேரத்துக்கு வரவில்லையென்றால் நீங்கள் சாயி தொண்டர்கள் அல்ல. ஒரு சாயி தொண்டரிடம் ஒரு பணியைக் கொடுத்தால் அரைமணித்தியாலத்திற்கு முன்பு வந்து விட வேண்டும். அது போல சேவாதளத் தொண்டர்க்கு ஒரு பணியைத் தந்தால் சேவை முடியும் வரைக்கும் அவர் அந்த இடத்திலேயே இருக்க வேண்டும்.

அதற்குப் பொறுப்பாக இருப்பவர் வந்து நீ இனிப்போகலாம். என்றால் தான். போகலாம் அதற்கு முதல் போக முடியாது. காரணம் சுவாமி சொல்கிறார். சேவாதளத் தொண்டர்கள் எனக்குக் கடிதம் எழுதத் தேவை இல்லை அவர்களுடைய தேவைகளை எல்லாம் நான் நிறைவேற்றி வைப்பேன் என்று சுவாமியினுடைய அனுக்கிரகம் தான் சுவாமி உங்களுக்கு இந்தச் சேவையைத் தந்தது. என்னுடைய அனுக்கிரகம்தான் நீங்கள் இந்த நிலையங்களில் அங்கத்தவர்களாகவும் ஒரு உத்தியோகத்தராக இருக்கும் நிலையைத் தந்தது. எனவே இந்த அனுக்கிரகத்தை நாம் காப்பாற்ற வேண்டுமேயானால் இந்த முறையிலே நாம் வாழ வேண்டும்.

## தொண்டர்களின் உடைகள்

பெண்கள் ஒரு பக்கமாகவும் ஆண்கள் ஒரு பக்கமாகவும் அமர வேண்டும். எங்கள் சிந்தனை செயல்கள் சொற்கள் எல்லாம் உணவினாலும் உடையினாலும் வருகிறது. சேவாதள ஆண் தொண்டர்கள் நீண்ட வெண்ணிற ஆடை அணிய வேண்டும். பெண்கள் பச்சைக் கரை போட்ட வெண்ணிற சேலை அணிய வேண்டும். என்று சுவாமி சொல்லியிருக்கிறார். தாவணி கூடுதலாக எடுத்து வலது பக்கத்துத் தோழை மூடி இருக்க வேணடும.

சேவாதள ஆண் பெண் தொண்டர்கள் அவசியம் ஏற்பட்டால் ஒழிய மற்றும்படி கலந்து பேசக்கூடாது, நகங்கள் வளர்க்கக் கூடாது. தலை வாரி பின்னப்பட்டு இருக்க வேண்டும். விரித்து விடக் கூடாது 100 பேர் போகிற இடத்திலே இரண்டு சாயி அங்கத்தவர்களும் போகிறார்கள் என்றால் இவர்கள் சாயி பாபாவின் ஆட்கள் என்று சொல்லக் கூடியதாக எமது நடை உடை இருக்க வேண்டும்.

எனவே சத்ய சாயி நிலையம் ஒரு சேவா நிலையம் சேவா நிலையத்தில இருக்கும் தொண்டர்களுக்கு நிலையத்தைப் பற்றி சுவாமியைப் பற்றி சுவாமியினுடைய போதனைகள் பற்றி எலலாம் தெரியவேணடும.

உங்களுடைய பணிகள் என்னவென்றால் நிலையத்தில் நடக்கும் பணிகள் உங்களுடைய பணிதான். நிலைய ஒழுங்கு செய்வது இரத்த தானம், வைத்தியசேவை போன்ற எல்லா சேவைகளும் உங்களுடையது தான் நீங்கள் இல்லாமல் சேவை இல்லை. ஒரு தீவிரபணியாளன் நிலையத்தில் இல்லையென்றால் நிலையம் இல்லை.

நீங்கள் சாதாரண ஆட்கள் இல்லை இறைவனின் தொண்டசள் ஆனால் இறைவனின் தொண்டர்கள் எப்படி நடக்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் பயிற்சி முகாம்.

* * *

யாருக்காவது எந்த விதத்திலாவது துன்பம் ஏற்பட்டால் உடனே நாம் அவர்களுக்குச் சேவை செய்து உதவ வேண்டும். வேலை செய்து மட்டுமல்ல, நமது சுற்றுப் புறத்தைசுத்தமாக வைத்துக் கொளவதன் மூலம் நாம் சேவை செய்யலாம். உஙகள் வார்த்தைகளால் சேவை செய்யலாம். நலல வார்த்தைகளால் இதயததிற்கும், நல்ல செயல்களால் மனதிற்கும் ஆறுதல் அளிக்கலாம் ஆகவே நல்ல வார்த்தைகள் உபயோகித்தும் நல்ல காரியங்கள் செய்தும் நீங்கள் மற்றவர்களுககுச் சந்தோஷம் அளிக்கலாம, கஷ்டத்திலிருக்கும் மக்கள் துக்கத்தில் மூழ்கியிருப்பவர்கள், உதவி செய்ய யாரும் இல்லாதவர்கள், இவர்களுக்கு நீங்கள் உதவ வேண்டும். உங்களது முதல் கடமையாக நீங்கள் இதை ஏற்க வேண்டும். இது ஒரு நல்ல சேவையே.

— பாபா —

சேவை செய்வதன் மூலம் பிறவிப் பிணியிலிருந்து விடுபடலாம். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org